அரசு ஊழியர்

நவம்பர் 2018

மலர் : 39 இதழ் : 11

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக
அச்சிட்டு வெளியிடுபவர் : மு.அன்பரசு

ஆசிரியர் : மு.சுப்பிரமணியன்

ஆசிரியர் குழு

மு.அன்பரசு, எம்.தங்கராஜ், ந.குமாரவேல்,
மொ.ஞானத்தம்பி, இரா.பன்னீர்செல்வம்,
எஸ்.தமிழ்ச்செல்வி, என்.ஜனார்த்தனன், தி.கலைசெல்வி

முகவரி : பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
e-mail : arasuoozhiyar@gmail.com

*அச்சகம்: சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,*
*19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,*
*எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை, சென்னை - 600 002.*

*ஆண்டுச் சந்தா : ரூ. 80 தனி இதழ் ரூ. 8*

## சூடா ஒரு கோப்பை சூப்

### புரட்சியின் வரலாறு

புதியன
செய்யும்போது
இன்றைய வரலாறு
நம்மைக்
“கைது” செய்யலாம்;
ஆனால்
புரட்சி
வென்றபின்
நாளை வரலாறு
நம்மை
“விடுதலை” செய்யும்!

- **பிடல் காஸ்ட்ரோ**

# வரலாறு சொல்லும் மாற்றம் விரைவில்...

**போ**ராட்ட வரலாறு தெரியாதவர்கள் ஆட்சியில் அனைத்து போராட்டங்களும் அடக்குமுறையால் முறியடிக்கப்படுகிறது. ஆம்... இன்றைய தமிழக அரசு விபத்து மூலம் அமைந்தது. ஆட்சியாளர்கள் அனைவரும் வாழ்க்கையில் போராடி ஆட்சிக்கு வரவில்லை என்பதையே இது உணர்த்துகிறது. பொய்யுரைக்கும் ஆட்சியாக மாறியிருக்கிறது.

அரசு ஊழியர்கள் போராட்டம், போக்குவரத்து ஊழியர்கள் போராட்டம், செவிலியர்கள் போராட்டம், மருத்துவர்கள் போராட்டம், மாணவர்கள் போராட்டம், விவசாயிகள் போராட்டம், சத்துணவு ஊழியர்கள் போராட்டம், அங்கன்வாடி ஊழியர்கள் போராட்டம், மின்வாரிய ஊழியர்கள் போராட்டம், ஆசிரியர்கள் போராட்டம், தொழிலாளர்கள் போராட்டம் என பல போராட்டங்கள் இந்தக் காலகட்டத்தில் நடந்தேறியுள்ளன. ஆனால் எந்த போராட்டத்திற்கும் முழுமையான தீர்வை ஆட்சியாளர்கள் தரவில்லை. காரணம் ஜனநாயக மாண்பை கிஞ்சிற்றும் கடைப்பிடிக்காதவர்கள். ஒட்டு மொத்த ஜனநாயகத்தை குழி தோண்டி புதைக்க முயற்சிக்கிறார்கள்.

அதன் வெளிப்பாடுதான், போராட்டங்களுக்கான அடக்குமுறையை ஏவி விடுதல், அனுமதி மறுப்பது, விதிமுறையை மீறி சம்பளம் பிடிப்பது, சங்க நிர்வாகிகள் மீது வழக்குப் பதிவு செய்து மிரட்டுவது, இயக்கங்களில் காவல் துறையினரை அதிக எண்ணிக்கையில் இறக்குவது என பல நடவடிக்கைகளில் இன்றைய ஆட்சியாளர்கள் முழுமையாக இறங்கியுள்ளனர். இதன் பின்புலத்தில் மத்திய பாஜக அரசின் கைப்பாவையாக செயல்படும் இந்த அரசை வைத்து தனது அரசியல் ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்ள, தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளை மறுக்கும் கொள்கைகளை தீவிரமாக அமுல் படுத்தத் தொடங்கி விட்டனர். தட்டிக் கேட்க திராணியில்லாத தமிழக அரசு, தங்களை காப்பாற்றிக் கொள்ளவே முடியாமல் மாநிலத்தில் நடக்கும் போராட்டங்களை மதிக்காமல், அழைத்துப் பேசாமல், அலட்சியப் போக்குடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஒருவகையில் சங்கம் அமைத்து கோரிக்கை வைத்து இனி போராட்டங்கள் நடத்தக் கூடாது என்பதை வெளிப்படையாக அச்சுறுத்தாமல், காவல் துறையை வைத்து கயமைத்தனமாக அச்சுறுத்துவது தொடர்கிறது.

ஆனாலும், எத்தகைய அடக்குமுறை இருந் தாலும், கடந்த ஆட்சியாளர்களின் காலத்தில் இல்லாத அளவில் மக்களும், அமைப்புகளும் முதல்வரின் புள்ளி விவரப்படி பார்த்தால் 31000 போராட்டங்கள் நடந்துள்ளது. எத்தகைய அடக்கு முறையும் சந்திக்க தயாராவோம் என்பதையே இது உணர்த்துகிறது.

வெறும் கோரிக்கைகளுக்காக மட்டும் நாம் போராடுவதில்லை. முதலில் உரிமை, சுய மரியாதை அதன்பின்னர் உரிமைளை மறுக்கிற காலமாக மாறி வருகிறது. இத்தகைய போக்கினை அனுமதிக்க முடியாது. தமது ஆட்சியில் நடை பெற்ற அனைத்து போராட்டங்களையும் அடக்கி விட்டோம் என்று கொக்கரிப்பது ஒரு நல்ல அரசுக்கு அழகல்ல. எத்தனை போராட்டங்களில் தீர்வு கண்டோம் என்பதில்தான் இந்த அரசின் வெற்றி உள்ளது. மொத்தத்தில் இந்த அரசு எல்லா வற்றிலும் தோல்வி அடைந்திருக்கிறது என்று சொன்னால் அதுதான் உண்மையான வரலாறு.

அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் போராடினால் நிதி இல்லை, சத்துணவு ஊழியர்கள் போராடி னால் நிதி இல்லை, போக்குவரத்து ஊழியர்கள் போராடினால் நிதி இல்லை என தொடர்ந்து சொல்லிவரும் கோயபல்ஸாக முதல்வரும், தமிழக அரசும் மாறியுள்ளது. ஆனாலும் இது உண்மையல்ல என்பது மக்களுக்கும் தெரியும்.

போராட்டங்களை நடத்தவிடாமல் முடக்கு வதும், கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு தீர்வு செய்யாத நிலையும் தொடருமானால் இப்படிப்பட்ட ஜனநாயக படுகொலையினை பார்த்துக் கொண்டு பொறுமை காக்க முடியாது. அதனால்தான் அரசு ஊழியர்கள் -ஆசிரியர்கள் (ஜாக்டோ-ஜியோ) போராட்டம் களமிறங்கியது. போராட்டங்களையும், கோரிக்கைகளையும் கண்டுகொள்ளாமல், இந்த அரசின் நடவடிக்கை தொடர்ந்த நிலையில் அதனை அலட்சியப்படுத்தி விட்டு ஜாக்டோ-ஜியோ கடந்த ஆண்டு செப்டம்பர் 2017 முதல் காலவரையற்ற வேலை நிறுத்தம் நடத்தியது. இதனுடைய வெற்றிதான் ஊதிய மாற்றம் மற்றும் ஏனைய கோரிக்கைகள் இன்றளவும் நிறைவேற்றப்படவில்லை.

இந்த அரசை நம்பி ஏமாறக்கூடாது என்பதனால் நிலுவைக் கோரிக்கைகளை நிறைவேற்ற ஜாக்டோ-ஜியோ பல கட்டப் போராட்டங்களை நடத்தினோம். அரசு கடும் அடக்குமுறையை ஏவிவிட்டதோடு, கோரிக்கைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்திடக்கூட முன்வரவில்லை. நமது நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற முன்வராத நிலையில் கோரிக்கைகள் நியாய மற்றது எனவும், புதிய பென்சனை ரத்து செய்ய வாய்ப்புகள் இல்லை எனவும் முதல்வர் தெரிவித் திருப்பது அரசு ஊழியர்கள்-ஆசிரியர்கள் மத்தியில் மிகுந்த அதிர்ச்சியையும், ஏமாற்றத்தையும் அளித்திருக்கிறது.

புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்வது குறித்து அமைக்கப்பட்ட ஸ்ரீதர்குழு அறிக்கையை தருவதற்கு முன்பே, சாத்தியமில்லை என முதல்வர் தெரிவித்திருப்பது அவர் ஏற்றிருக்கும் சட்டப்படியான பதவிக்கு முரணானது. எனவே, இந்த அரசு ஏமாற்றத் தொடங்கி விட்டது.

வஞ்சித்த அரசிடம் நமது வாழ்வாதார பிரச் சனைகளை வென்றிடத்தான் அரசின் இத்தகைய பொய்யுரைக்கு மத்தியிலும், கோரிக்கை நியாய மானது என்பதாலும், பல அடக்குமுறைகளுக்கு மத்தியில் மீண்டும் ஜாக்டோ-ஜியோ 2018 நவம்பர் 27 முதல் காலவரையற்ற வேலை நிறுத்தம் நடத்திட முடிவு செய்தது. போராடிக் கொண் டிருப்பதே நமது வேலை இல்லை. நீதி கிடைக் காத காரணத்தால் அரசு போராட்டத்திற்கு தள்ளியுள்ளது.

ஒரு நல்ல அரசு போராடும் ஜாக்டோ-ஜியோவை அழைத்துப் பேசி பிரச்சனைகளை தீர்க்க வேண்டும். இல்லையென்றால், நமது வேலை நிறுத்தம் இந்த அரசுக்கு "வரலாறு சொல்லும் மாற்றத்தை" உருவாக்கும். ◁

## வாசகர் கடிதம்

முன் அட்டைப் படம் வழக்கமாக நமது தோழர்களின் வீரம் செறிந்த போராட்ட களத்தின் எழுச்சியை ஊட்டியது. அடக்குமுறைக்கு அஞ்சமாட்டோம், ஜாக்டோ-ஜியோ ஆயத்த மாநாடு, மடை திறந்த வெள்ளமென படை செல்வோம், சூடு சொரணை கெட்ட ஜென்மங்கள், சே பற்றிய கட்டுரைகள் சிறப்பாக இருந்தது. விழித்தெழு பெண்ணே கவிதையும் நன்றாக இருந்தது. மொத்தத்தில் இந்த இதழ் மிகவும் சிறப்பாக இருந்தது.

- **நா.தெட்சிணாமூர்த்தி,** கடலூர்

# தேசம் தழுவிய அகில இந்திய வேலை நிறுத்தம்

# 2019 சனவரி 8 மற்றும் 9

# ஏன்? எதற்கு?

## *அகில இந்திய தொழிலாளர்களின் தேசிய கருத்தரங்கம்*

## *புது தில்லி -2018,செப்டம்பர் 28*



இந்திய நாடு விடுதலை அடைந்த பிறகு இப்படியொரு தாக்குதலை இந்திய தொழிலாளி வர்க்கம் சந்தித்ததில்லை. ஆம் கடந்த 2014ம் ஆண்டு உலகின் மிகப்பெரும் ஜனநாயக நாடான இந்தியாவை ஆளும் பொறுப்பு பாரதிய ஜனதா கட்சிக்கு பெரும்பான்மை கிடைத்த நிலையில் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டதிலிருந்து இன்று வரை அனைத்து ஜனநாயக உரிமைகள் மீதான தாக்குதலை மத்திய அரசு தொடுத்துள்ளது. இனியும் பொருக்க முடியாது என்ற நிலையில்தான், கடந்த 2018 செப்டம்பர் மாதம் 28ம் நாள் புது தில்லியில் உள்ள மாவலங்கார் பகுதியில் அமைந்துள்ள தால்கதோரா அரங்கத்தில் இந்திய தொழிற்சங்க இயக்கங்களின் அனைத்து தலைவர்களும், பங்கெடுத்துக் கொண்ட ***அகில இந்திய தொழிலாளர்களின் தேசிய கருத்தரங்கம்*** நடைபெற்றது.


இக்கருத்தரங்கத்தில் இந்திய தேசத்தின் வளர்ச்சிக்காக உழைத்துவரும் அனைத்து வகையான தொழிலாளர்களின் சங்கமமாக இக்கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் ஆலைத் தொழிலாளிகள், விவசாயிகள், பொதுத்துறை நிறுவனங்களின் தொழிற்சங்கப் பிரதிநிதிகள், வங்கி, காப்பீடு, மின்சாரம், போக்குவரத்து , மத்திய, மாநில அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்டவர்களும் மாதர் சங்கப் பிரதிநிதிகளும், வருங்கால இந்தியாவின் பிரதிநிதிகளான மாணவர்களும், வாலிபர்களும் பங்கேற்றனர்.

### மத்திய அரசும், பா.ஜ.க.வும்

கடந்த தேர்தலில் காங்கிரஸ் தலைமையிலான ஆட்சியினால் ஏற்பட்ட கடுமையான விரக்தியிலும், பல்வேறு மாநிலங்களில் கட்சிகளிடையே இருந்த ஒற்றுமையின்மையாலும், ஊடகங்களையும், மின்னணு ஊடகங்களையும் இந்திய பெருமுதலாளிகள் மற்றும் கார்ப்பரேட் நிறுவனங்களின் உதவியினாலும் மத்தியில் பா.ஜ.க. ஆட்சியை கைப்பற்றியது. அன்றைய சூழ்நிலையில் அரசியல் குறித்த விழிப்புணர்வு இல்லாத சாதாரன மக்களிடத்தில் ஒரு புதிய ஆட்சி அமைந்துள்ளது எனவும் நிச்சியமாக காங்கிரஸ் தலைமையிலான அரசு செய்த மக்கள் விரோத முடிவுகளை எடுக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கையும் கொண்டிருந்தனர்.

பா.ஜ.க. தலைமையிலான அரசு பொறுப்பேற்று நான்கரை ஆண்டுகளுக்கு மேலான நிலையில் திரு.மோடி தலைமையிலான இந்த அரசு ஆற்றிய பணிகளை பரிசீலித்து பார்க்கும்போது 2014ம் ஆண்டுக்கு முந்தைய காலகட்டத்தில் இருந்த வாழ்வாதாரம்கூட இல்லாத நிலைதான் அனைத்து பகுதி மக்களுக்கும் ஏற்பட்டுள்ளது என்பதுவே நிதர்சனமாகும்.

விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்கு உத்தரவாதம் இல்லாத நிலையில் நாடு முழுவதும் விளை நிலங்களை பன்னாட்டு மற்றும் பகாசுர கம்பெனிகளுக்கு தாரை வார்ப்பதும், விவசாயிகளின் வேளாண்மைக்கான இடுபொருட்களின் கடுமையான விலை உயர்வினாலும், இயற்கை பேரழிவினாலும், மழை பெய்தின்மையினாலும், விவசாயக்கடன் மறுப்பினாலும் விவசாயிகள் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். விவசாயிகள் கோரிய விளை பொருட்களுக்கான குறைந்தபட்ச ஆதார விலையைக்கூட திரு.மோடி அரசு நிர்ணயித்திட மறுத்ததினாலும் ஆண்டுக்காண்டு விவசாயிகளின் தற்கொலை எண்ணிக்கை உயர்ந்து கொண்ட வந்துள்ளது.




நமது தமிழக விவசாயிகள்புது தில்லி சென்று விவசாயக் கடன்களை ரத்து செய்திட வேண்டும் என வலியுறுத்தியும், மேட்டூர் அணையினை திறக்கவும் வேண்டி போராடியும் கூட விவசாயிகளை அழைத்துப்பேசக்கூட மனமில்லாத பிரதமர் திரு.மோடியும், அவரது சகாக்களும் பல்லாயிரக்கணக்கான கோடி பணத்தினை கடனாக பெற்று இந்தியாவை விட்டு ஓடிய மல்லையா மற்றும் நீரவ் மோடி போன்றவர்களை

பல முறை சந்தித்ததாக ஊடகச் செய்திகள் வெளிவந்தது. இதுதான் திரு.மோடி அவர்கள் விவசாயிகள் மீதான அணுகுமுறை என்பதை இக்கருத்தரங்கத்தில் உரையாற்றிய விவசாய சங்கங்களின் பிரதிநிதகள் மிகவும் வேதனையோடு பதிவு செய்தனர்.

### இந்திய தொழில் வளர்ச்சி மீதான அணுகுமுறை

திரு.மோடி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் இந்திய நாட்டின் வளர்ச்சிக்காக அமெரிக்கா உள்ளிட்ட உலகின் பல நாடுகளுகளுக்கு சென்று தொழில் வளர்ச்சிக்காக முதலீடுகளை ஈர்ப்பதற்காக பல்வேறு நாடுகளில் உள்ள இந்தியர்கள் உள்ளிட்ட பன்னாட்டு நிறுவனங்களின் முதலீட்டாளர்களை சந்தித்து இந்தியத் தொழில் வளர்ச்சிக்காக பேசியதாக ஊடகங்கள் செய்திகளாக அளித்தன. ஆனால் கடந்த நான்கரை ஆண்டுகளில் ஏறத்தாழ உற்பத்தித் துறைகளில் இருந்த மிகப்பெரிய நிறுவனங்கள் இழுத்து மூடப்பட்டுள்ளதும், இதனால் லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளதும் தான் உண்மையான நிலையாகும். மேலும், எளிதாக வர்த்தகம் செய்தல், ஸ்டார்ட் அப் இந்தியா, மேக் இன் இந்தியா , என்ற கவர்ச்சிகரமான முழக்கங்களை முன்வைத்து அந்நிய முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்கான நடவடிக்கை என்ற பெயரில் கார்ப்பரேட் நிறுவனங்கள் மற்றும் பெரு முதலாளிகளுக்கு ஆதரவான சட்டங்களை இயற்றியதும், இந்திய உழைப்பாளி மக்களின் உழைப்பினை சொற்ப கூலியில் சுரண்டிடவும், காலம்காலமாக போராடிப் பெற்ற பல்வேறு சமூகபாதுகாப்பு உரிமைகளை மறுக்கின்ற வகையில் தொழிலாளர் நலச்சட்டங்களை திரு.மோடி தலைமையிலான அரசு திருத்திடவும் செய்தது. ஆனாலும் உற்பத்தித் துறையில் தேசிய மொத்த உற்பத்தி சதவீதம் 2010ம் ஆண்டுகளில் நிலவிய நிலைக்கும் பின்னுக்கு சென்றுள்ளதாக பொருளாதார நிபுணர்கள் கவலையுடன் பதிவு செய்துள்ளனர்.

### இந்திய பொருளாதாரத்தின் மீதான தாக்குதல்

ஒட்டு மொத்தமாக இந்தியப் பொருளாதாரம் மிகப்பெரும் பின்னடைவுக்கு சென்ற நிலையில் கருப்புப் பணத்தை மீட்பதாக கூறி பணமதிப்பு இழப்பு நடவடிக்கையினை திரு.மோடி தலைமையிலான அரசு மேற்கொண்டது. இந்நடவடிக்கையின் காரணமாக இந்தியத் தொழிலாளி வர்க்கம் மிகக்கடுமையாக சொல்லொண்ணா துயரத்திற்கு ஆளானது என்பதை நம் நினைவில் அழிக்க முடியாத பிம்பமாகவே உள்ளது. உண்மையில் இந்த பணமதிப்பு இழப்பு நடவடிக்கையினால் கருப்புப் பணம் வைத்திருந்தவர்களுக்கு சாதகமாகவே இருந்தது என பத்திரிகைச் செய்திகள் உறுதிப்படுத்தின. நம்மைப் போன்ற மாதாந்திர ஊதியம் பெறுபவர்களும், அன்றாட கூலி பெறுபவர்களும் உயிரிழப்பு உள்ளிட்ட பல்வேறு துயரங்களுக்கு ஆளாக்கப்பட்டதை இக்கருத்தரங்கத்தில் பேசிய பல தலைவர்களும் குறிப்பிட்டனர்.

### GST வரி விதிப்பும், தொழிலாளர்களின் மீதான தாக்குதலும்

ஒரே நாடு - ஒரே வரி விதிப்பு முறை என்ற முழக்கத்துடன் முந்தைய காங்கிரஸ் தலைமையிலான அரசு கொண்டு வர முயற்சித்த ஜிஎஸ்டி வரிவிதிப்பு முறையில் திரு.மோடி தலைமையிலான பாஜக அரசு இன்றைய பெருமுதலாளிகளின் வேண்டுகோளுக்கிணங்க சில மாற்றங்களை செய்து வரி வருவாயில் பெரும்பான்மையினை மத்திய அரசின் கஜானாவிற்கு கொண்டு செல்கின்ற வகையில் ஜிஎஸ்டி வரி விதிப்பு முறை அமலாக்கப்பட்டது. மாநிலங்களின் வரி வருவாய் கடுமையான இழப்பிற்கு உள்ளாக்கப்பட்டது. இந்நடவடிக்கையினால் மிகசாதாரண ஏழை, எளிய மக்கள் பயன்படுத்துகின்ற அத்தியாவசியப் பொருட்களின் விலை பல மடங்கு உயர்ந்தது. வரி ஏய்ப்போருக்கு சாதகமாகவும் அமைந்துள்ளது. சாதாரண மக்கள் அன்றாடம் பயன்படுத்துகின்ற பொருட்கள் மற்றும் சேவைகளின் வரி உயர்வால் உணவு விடுதிகளில் உணவுப்பண்டங்களின் விலை உயர்வும், உடை மற்றும் குடியிருப்புக்கான செலவினங்களும், காப்பீடு, வங்கி போன்ற சேவைகளின் மீதான வரிவிதிப்பினாலும் சாதாரண மக்களின் வாங்கும் சக்தியின் மீதான கடுமையான தாக்குதலை மத்திய அரசு தொடுத்துள்ளது குறிப்பாக அணிதிரட்டப்படாத தொழில்களில் பணியாற்றி வரும் தொழிலாளர்கள் (திருப்பூர் ஆடைத்தொழில் போன்ற பல்வேறு தொழில்கள்)மற்றும் பீடித் தொழிலாளர்கள் ஆகியோர் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் இக்கருத்தரங்கத்தில் பலரும் விவாதித்தனர்.

### தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்கள் மீதான தாக்குதல்

திரு.மோடி தலைமையிலான மத்திய அரசு இந்தியப் பொருளாதாரத்தின் மீதும், விவசாயிகள் மற்றும் தொழில் வளர்ச்சியின் மீதான தாக்குதலைத் தொடர்ந்து இந்திய தொழிலாளர் வர்க்கத்தின் மீதான தாக்குதல் மிகக்கடுமையாக உள்ளதை இக்கருத்தரங்கத்தில் பங்கேற்று உரையாற்றிய CITU ன் அகில இந்திய பெதுச்செயலாளர் திரு.தபன்சென் உள்ளிட்டோர் கவலையுடனும் அதே சமயத்தில் ஆவேசத்துடனும் பதிவு செய்தனர்.

பாஜக அரசு அமைந்தவுடன் முதலீட்டாளர்களுடன் சந்திப்பு என்ற பெயரில் முதலாளிகளின் கோரிக்கையினை கனிவுடன் கேட்டறிந்த திரு.மோடி முதலாளிகளுக்கு சாதகமான சட்டங்களை நாடாளுமன்றத்தில் வைத்து

அமல்படுத்தியதோடு, இந்தியத் தொழிலாளிகள், ஊழியர்கள் உள்ளிட்ட அனைவரது கோரிக்கைகளை பரிசீலிக்காதது மட்டுமல்லாது ஏற்கனவே பெற்ற உரிமைகளுக்கு எதிரான சட்டங்களை கொண்டு வந்தார். நிரந்தரமான தொழில்களில் இருந்த லட்சக்கணக்கான தொழிலாளர்களையும், ஊழியர்களையும் அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்கள் உள்ளிட்டவைகளிலிருந்து வெளியேற்றக் கூடிய வகையில் ஊதிய உயர்வு மறுப்பு சமூக பாதுகாப்பு திட்டங்களை ரத்து செய்தல் பொதுத்துறை ஊழியர்களின் ஊதிய ஒப்பந்த நடைமுறை உள்ளிட்ட உரிமைகளை மறுத்தோடு பணி இழப்பு உள்ளிட்ட நடவடிக்கைகளுக்கு ஆளாக்கப்பட்டனர்.

மேலும் பொதுத்துறை பங்குகளை விற்பனை செய்து பொதுத்துறைகளை பலவீனப்படுத்துவதும், தனியாருக்கு தாரைவார்ப்பதும், குறைந்த ஊதியத்தில் நிரந்தரப் பணியிடங்களில் ஒப்பந்த முறை நியமனம், வெளிமுகமை மூலம் பணி நியமனம் மற்றும் மத்திய அரசு ஊழியர்களின் 7வது ஊதிய திருத்த குறைபாடுகள் களைந்திட மறுப்பதும், ஊதிய நிர்ணய காரணிகளை உயர்த்திட மறுப்பது, ஊழியர்களுக்கு எதிரான புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்திட மறுப்பது, குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்திட மறுப்பது, என ஊழியர்களின் கோரிக்கைகள் புறக்கணிப்பது என தொழிலாளர் மற்றும் ஊழியர் விரோத நடவடிக்கைகளை திரு.மோடி தலைமையிலானஅரசு மேற்கொண்டு வருகிறது என இக்கருத்தரங்கத்தில் முன்வைக்கப்பட்டது.

மேலும் அரசின் திட்டப் பணிகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு ஊதியம் மற்றும் வசதிகள் உள்ளிட்ட தொழிலாளர் அந்தஸ்து, பொது சேவைகள் உள்ளிட்ட பொது மற்றும் அரசு துறைகளை தனியார்மயமாக்குவதை கைவிடுதல், பெருமளவில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஒப்பந்த முறையை கைவிடுதல், சர்வதேச தொழிலாளர் சட்டங்கள் 87, 98 ஆகியவற்றை ஏற்றுக்கொள்ளுதல் உள்ளிட்ட 12 அம்ச கோரிக்கைகளை மூர்க்கத்தனமாக தொடர்ந்து மத்திய அரசு புறக்கணிப்பதை இந்த கருத்தரங்கு வேதனையோடு சுட்டிக்காட்டியது. வீட்டு வேலை தொடர்பான சர்வசேத சட்டம் 177 மற்றும் வீட்டுப் பணி தொடர்பான சர்வதேச சட்டம் 189 ஆகியவையும்கூட இன்னும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

## தொழிற்சங்கங்களை புறக்கணிக்கும் போக்கு

திரு.மோடி தலைமையிலான மத்திய அரசு பொறுப்பேற்றபின் தொழிற்சங்கங்களை தொடர்ந்து புறக்கணித்து வருகிறது. இந்திய தொழிலாளர்களின் கூட்டத்தினை ஜூலை 2015 க்குப் பிறகு கூட்டப்படவில்லை. மேலும் அகில உலக அமைப்புகள் உள்ளிட்ட எல்லா முத்தரப்பு மற்றும் குழுக்களில் INTUC உள்ளிட்ட , தொழிற்சங்கங்கள் கூட இணைக்கப்படவில்லை. மத்திய அரசு ஊழியர்களின் ஊதியக்குறைபாடுகள் களைவதற்காக அமைக்கப்பட்ட நான்கு குழுக்களிலும் ஊழியர்களின் நியாயமான கருத்துக்களை கேட்டறிந்த பின்பும் கூட சம்பந்தப்பட்ட துறை அமைச்சர்கள் தீர்வு காண முயற்சிக்கவில்லை. அதே போன்று பாஜக ஆளும் மாநிலங்களிலும், தமிழ்நாடு போன்ற மாநிலங்களிலும் தொழிலாளர்கள் , அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் அமைப்புகளின் தொழிற்சங்கங்களை அழைத்துப்பேசிடாமல் தொடர்ந்து புறக்கணித்து வந்துள்ளனர். மேலும் அங்கன்வாடி ஊழியர்கள், ஆஷா, மதிய உணவு திட்ட ஊழியர்கள், MGNREGA மற்றும் வீட்டுப்பணியாளர்கள் ஆகியோருக்கு தொழிலாளர் அந்தஸ்த்து கூட தர மறுத்து வருகின்றனர் என்பதையும் இக்கருத்தரங்கத்தில் கவலையுடன் பதிவு செய்தனர்.

மேலும், வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல தொழிலாளர்களால் சேமிக்கப்பட்ட தொழிலாளர் வைப்பு நிதியாக (EPF)உள்ள 24லட்சம் கோடி ரூபாயினை நிதிச்சந்தையில் முதலீடு செய்திட மத்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இது போன்ற தொழிலாளர் விரோத நடவடிக்கைகளினால் மத்திய அரசினை கண்டிக்கின்ற வகையில் நாடு தழுவிய அளவிலான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமெனவும் தொழிலாளர்கள் மத்தியில் எழுந்துள்ள ஆவேசத்தினை கருத்தில் கொண்டு இக்கருத்தரங்கத்தில் முடிவாற்ற வேண்டுமென பங்கேற்ற அனைத்து தொழிற்சங்க பிரதிநிதிகளும் ஒரே குரலில் ஒலித்தனர்.

## மக்கள் விரோத நடவடிக்கைகள்

இந்திய நாட்டை வல்லரசாக்கப் போவதாக வெற்று முழக்கங்களை முன்வைத்து ஆட்சி பொறுப்பேற்ற திரு.மோடி அரசு, இராணுவத் தளவாடங்கள், ஆயுதங்கள் உற்பத்தி செய்வது, இராணுவ வீரர்கள் பயன்படுத்தும் பொருட்கள் உள்ளிட்டவைகளை தனியாருக்கு தாரைவார்க்கும் நடவடிக்கைகளில் வேகமாக இறங்கியுள்ளது. அதன் ஒரு பகுதியாக இராணுவ விமானம் உற்பத்தி மற்றும் இறக்குமதி செய்வதில் எவ்வித தொடர்பும் இல்லாத அம்பானி போன்ற பெருமுதலாளிகளுக்கு ஒப்பந்தம் செய்துள்ளதும், அதற்கான பல லட்சக்கணக்கான கோடி ரூபாய் ஊழல்நடந்துள்ளதையும் சமீபகால பத்திரிக்கைகளும், சமீபத்தில் உச்சநீதிமன்றமும்கூட கருத்துக்களை பதிவு செய்துள்ளதை நாம் நினைவில் கொள்ள வேண்டியுள்ளது.

ஏற்கனவே உலகின் பல்வேறு நாடுகளில் அமல்படுத்தி தோல்வியடைந்துள்ள நிதி சார்ந்த நடவடிக்கைகளான வங்கிகளை தனியார்படுத்துவதும், நல்ல நிலையில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் வங்கிகளை ஒருங்கிணைப்பு என்ற பெயரில் பலவீனப்படுத்திடவும் மத்திய அரசு தொடர்ந்து நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

மேலும் பன்னாட்டு நிறுவனங்களின் உற்பத்தி பொருட்களை தங்குதடையின்றி எடுத்துச் செல்கின்ற வகையில் சாலைகளை தனியார்படுத்துவதும், பொதுப்போக்குவரத்து துறைகளை தனியார்வசம் ஒப்படைக்கவும், ரயில்வே மேம்பாட்டு ஆணையம் மூலம் ரயில் தடங்களை தனியார்வசம் கொண்டு சென்று கட்டணங்களை முதலாளிகளின் விருப்பம் போல் செயல்படுத்திக் கொள்ளவும், (தற்போதைய பெட்ரோல் மற்றும் டீசல் விலை நிர்ணயம் செய்வது போன்று) திரு.மோடி தலைமையிலான மத்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருவதையும் இக்கருத்தரங்கம் ஆவேசத்துடன் கண்டித்துள்ளது.

மேற்காணும் மக்கள் விரோத, தொழிலாளர் விரோத மற்றும் ஊழியர் விரோத நடவடிக்கைகளை கண்டித்து பல்வேறு கட்ட நடவடிக்கைகளின் வாயிலாக மத்திய அரசின் கவனத்திற்கு கடந்தகாலங்களில் பல்வேறு போராட்டங்களின் வாயிலாக கொண்டு சென்ற பிறகும் மத்திய அரசு இந்திய தொழிலாளர்களின் உணர்வுகளை புறக்கணித்து வந்துள்ளது.

கடந்த 8.8.2017 அன்று இதே போன்ற கருத்தரங்கத்தின் வாயிலாக நாடு தழுவிய அளவில் மக்களையும், தொழிலாளர்களையும் சந்தித்து பிரச்சாரம் செய்வது என எடுத்த முடிவின் அடிப்படையில் அனைத்து மாநிலங்களிலும் மிகச்சிறப்பாக இயக்கம் மேற்கொண்ட அனைத்து தொழிற்சங்கங்களுக்கும் பாராட்டுதலும், வாழ்த்துக்களும் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் இறுதியாக மத்திய அரசின் மக்கள் விரோத மற்றும் தொழிலாளர் விரோத நடவடிக்கைகளிலிருந்து திரு.மோடி அரசு பின்வாங்க வேண்டும் எனவும் இல்லையெனில் பின்வரும் இயக்கங்களை தொடர்ந்து வேலைநிறுத்தம் மேற்கொள்வது எனவும் இக்கருத்தரங்கத்தில் பங்கேற்ற ஆயிரக்கணக்கான தொழிற்சங்க பிரதிநிதிகளின் பலத்த கரஓசைகளுடன் நிறைவேற்றப்பட்டது.

2018 நவம்பர் மாதத்தில் அனைத்து மாநிலங்களிலும் மத்திய அரசின் மக்கள் விரோத கொள்கைகளை கண்டித்து கருத்தரங்கம் நடத்துவது...

2018 டிசம்பர் 17 முதல் 22 வரை அனைத்து தொழிற்சாலைகள்/அலுவலகங்கள் முன்பாக மத்திய அரசின் மக்கள் விரோத நடவடிக்கைகளை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தி வேலைநிறுத்த அறிவிப்பினை வெளியிடுவது...

2019 சனவரி 8 மற்றும் 9ம் தேதிகளில் நாடு தழுவிய அகில இந்திய வேலை நிறுத்தம் செய்வது எனவும் ஏக மனதாக முடிவாற்றப்பட்டது.

ஆகவே தோழர்களே!

உழைப்பாளி மக்களின் இந்த தேசிய கருத்தரங்கு, அரசமைப்பு சட்டம் வழங்கியுள்ள மற்றும் ஜனநாயக உரிமைகளை பயன்படுத்தும் அதே வேளையில், சட்டபூர்வமான தன் எதிர்ப்பினை தெரிவிப்பதுடன் உழைக்கும் மக்களின் அதிகரித்துவரும் நியாயமான ஆவேச உணர்வுகளுக்கு வடிகால் வழங்கிடவும் உழைக்கும் மக்கள் மட்டுமன்றி ஒட்டுமொத்த சமூகத்தின் நலன்களுக்கும் அபாயகரமான கேடுவிளைவிக்கும் தவறான கொள்கைகளை உடனடியாக மாற்றியமைத்திட வேண்டுமெனவும் இக்கருத்தரங்கம் அறைகூவல்விடுத்துள்ளது.

இந்த அறைகூவலை நமது அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம் முழுமையாக ஏற்றுக்கொண்டுள்ளது. அதனடிப்படையில், கருத்தாலும், கரத்தாலும் உழைக்கின்ற உழைப்பாளி மக்களோடு நாமும் இணைந்து நாடு தழுவிய அளவில் விரிவான பிரச்சாரத்தை மேற்கொண்டு இந்திய தொழிற்சங்கங்களின் அறைகூவலின்படி மாநில கருத்தரங்கம், வாயில் கூட்டங்கள் உள்ளிட்ட 2019 சனவரி 8 மற்றும் 9 தேதிகளில் நடைபெறவுள்ள அகில இந்திய பொது வேலை நிறுத்தத்தில் அனைத்து அரசு ஊழியர்களையும் பங்கேற்கச் செய்வது என முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இது போன்ற அகில இந்திய வேலை நிறுத்தத்தில் கடந்த காலங்களில் 20 கோடிக்கும் மேலான தொழிலாளர்கள், ஊழியர்கள் உள்ளிட்ட உழைப்பாளி மக்கள் பங்கேற்றுள்ளனர்,இம்முடிவினை தமிழகத்தில் முழுமையாக அமல்படுத்துவதுடன் மூலம் இந்தியஉழைப்பாளி மக்களோடு நமது ஒருமைப்பாட்டை முழுமையாக வெளிப்படுத்துவோம். தடைகளை தகர்த்து சாதனை படைத்திட உழைப்பாளி மக்களின் வாழ்க்கையை தாக்கும் அரசின் கொள்கைகளை முறியடிக்க ஆர்த்தெழுவோம்.

**"எல்லோருக்கும் விடுதலை கிடைக்காமல்**
**தனி ஒருவனுக்கு மட்டும் விடுதலை கிடைக்காது**
**எல்லோருக்கும் நியாயம் கிடைக்காமல்**
**தனி ஒருவனுக்கு மட்டும் நியாயம் கிடைக்காது.**
**அனைவருக்கும் மகிழ்ச்சி கிடைக்காமல்**
**தனியொருவனுக்கு மட்டும் மகிழ்ச்சி கிடைக்காது"**

***- ஹெர்பெர்ட் ஸ்பென்சர்***

◁

# கேலிக்கூத்தாகும் தனிமனித ரகசியம்

அறிவியலின் பரிணாம வளர்ச்சியே இன்றைய டிஜிட்டல் உலகம் எனும் மாயை.

இன்றைய ஆட்சியாளர்களும் அதையே முழங்கி வரும் வேளையில் அரசுத்துறையில் ஏராளமான பணியிடங்கள் கபளீகரம் செய்யப்பட்டு வருவது நாமறிந்ததே.

1980-90களில் இந்தியாவில் கணினி அறிமுக மாகும் போது அதை எதிர்த்து பாராளுமன்றம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றதாம்.

2003ஆம் ஆண்டு வரை அரசு ஊழியர்கள் தாம் பணிபுரியும் அலுவலகங்களிலேயே தம்முடைய ஊதியத்தை பெற்று வந்தனர். இதில் ஏதோ மிகப்பெரிய மாற்றத்தை கொண்டு வருவதாய் எண்ணி வங்கிகளில் கணக்கு தொடங்கச் செய்து அதன் மூலம் ஊதியம் வழங்கும் முறையை 2003ஆம் ஆண்டு வாக்கில் தமிழக அரசு அறிமுகப்படுத்தியது.

ஆனால் வங்கியின் தற்போதைய நிலை, இருக்கும் பணத்திற்கு உத்திரவாதமில்லை, நம் பணத்தை நாம் எடுக்கவே மூன்று முறைக்கு மேல் அபராதம் வசூலிக்கப்படுகிறது. இதில் பணமதிப்பு நீக்க நடவடிக்கையால் நாம் பட்ட அல்லலை மறக்க இயலாது.

2015-இல் கருவூலத் துறையில் புதிய ஆணையாளராக பெறுப்பேற்ற தென்காசி T.S.ஜவஹர் தேசிய தகவல் ஆணையம் என்ற அமைப்பிடம் இணைய தளத்தின் மூலம் ஊதியம் வழங்க தகவல்கள் திரட்டப்பட்டு ரூ.300 கோடிகளுக்கும் மேற்பட்ட தொகையினை செலவழித்தது இன்று முற்றிலும் வீணாணதாகி விட்டது.

தற்போது ஒட்டுமொத்த அரசு ஊழியர்களின் பணிப் பதிவேடு உள்ளிட்ட அனைத்துயும் இணைய தளத்தில் பதிவேற்றம் செய்து பராமரிக்க WIPRO எனும் தனியார் நிறுவனத்திடம் பல நூறு கோடிகளை செலவழித்து ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதில் வேடிக்கை என்னவெனில் இன்றைய டிஜிட்டல் இந்தியாவில் அனைத்து அலுவலகங்களிலும் அதற்கான உட்கட்டமைப்பே இல்லை என்பதுதான் எதார்த்தம்.

அதிலும் அதிவேக இணையதள சேவை ஒட்டுமொத்த தமிழகத்திலும் இன்றளவில் உள்ளதா என்பதைக்கூட அறிய முற்படாமல் அல்லது அதற்கான முயற்சியை கிஞ்சிற்றும் மேற்கொள்ளாமல், முறையான பயிற்சியின்றி 01.11.2018 முதல் அமல்படுத்தப்படும் என்ற ஆணையாளரின் மேடைப்பேச்சும் ஊடகச் செய்தியும் வேடிக்கையாகவே உள்ளது.

மேலும், இதுவரை அரசு ஊழியர்களின் மற்றொரு உயிராக கருதப்படும் பணிப்பதிவேடு உள்ளிட்ட அத்தனை தனிமனித மற்றும் ஒட்டுமொத்த அரசு இயந்திரத்தின் ரகசியங்களையும் இணைய தளத்தில் பதிவேற்றுவது என்பது பேராபத்தை விளைவிக்கக் கூடும்.

ஏனெனில் இன்றைய காலகட்டத்தில் இணையதளம் என்பது முற்றிலும் பாதுகாப்பற்றதாக உள்ளது என்பதை தினந்தோறும் கிடைக்கப் பெறும் தகவல்களை கொண்டே ஊகித்துவிடலாம்.

இந்தியாவின் உச்சபட்ச பாதுகாப்பாக கருதப்படுவது ஆதார். ஆதார் மிகவும் பாதுகாப்பானது அதை எவ்வழியிலும் தவறாக பயன்படுத்த இயலாது என்ற அந்த ஆணைய தலைவரின் சவாலை ஏற்ற ஹேக்கர்கள் அவருடைய வங்கிக் கணக்கில் ஆதார் எண்ணை பயன்படுத்தி ஒரு ரூபாய் செலுத்தியது, முகநூல் என்ற சமூக வலைதளத்தில் கோடிக்கணக்கான தகவல்கள் திருடப்பட்டதை அந்நிறுவன உரிமையாளரே ஒத்துக்கொண்டது, கூகுள் பிளஸ் என்ற கூகுளின் மற்றொரு வலைதளத்தை ஹேக்கர்கள் முடக்கியதையும், இம்மாதத்தில் கூட தொலைத்தொடர்பு நிறுவனங்களின் சேவை பாதிக்கப்பட்டதாக பத்திரிக்கைகள் தகவல்களை பகிர்ந்துள்ளது. யூடியூப் போன்றவையும் சமீப காலங்களில் மிகப்பெரிய சேவை பாதிப்பை ஏற்பட்டதையும் அறியலாம்.

இந்நிலையில் கருவூலத் துறை ஆணையாளர் தனிமனித ரகசியங்களை பாதுகாப்பற்றதாக்கவே மிகப்பெரிய முயற்சி மேற்கொண்டுள்தாக தோன்றுகிறது. அதிலும் அரசின் மிக முக்கிய துறையை தனியார் வசம் ஒப்படைப்பதன் மூலம் இத்தனை காலம் பாதுகாக்கப்பட்ட அத்தனை

அரசு பதிவேடுகளும் சந்தைப்படுத்தும் முயற்சி யாகவே தோன்றுகிறது.

பாதுகாப்பிற்கே பாதுகாப்பற்ற சூழ்நிலையில், டிஜிட்டல் உலகின் மீதான நம்பிக்கையை இழந்து வரும் வேளையில் IFH&RMS எனும் தோல்வித் திட்டத்தை கைவிட்டு தனிமனித ரகசியத்தை காக்க ஆணையாளர் முன்வர வேண்டும்...

- **க.நீதிராஜா,** மதுரை

# கோயபல்ஸ் பேசுகிறேன்

பிள்ளை பெறுவதற்கு
எல்லையில்லை
மத விரிவாக்கம்
நிதம் எளிதாகும்

இஸ்லாமியர்களின் நாடு
பாகிஸ்தானை நாடு
இங்கில்லை ஓடு

காதலர் தினம்
கலாச்சார சீரழிவு
கட்டுவோர்ம ராக்கி
கலாச்சார காவலர்களாகி

விமான கண்டுபிடிப்பாளர்கள்
அதென்ன அமெரிக்க ரைட் சகோதரர்கள்
தவறான பாடமது
புராணகால புஷ்பக விமானம்
இமாலய கண்டுபிடிப்பு நமது

பாரப் போரின் நேரலை
சஞ்சயனே சாட்சி
இதிகார விஞ்ஞான மாட்சி

உறுப்பு மாற்று
அறுவை சிகிச்சையின் உச்சம்
கொள்ளை அழகுடன்
பிள்ளையாரே சாட்சி

காந்தாரி நூறு பெற்றது
விந்தையன்று
விஞ்ஞானமது

வளர்க்க இயலாதெனினும்
கொல்ல வேண்டியது பசுவன்று
இயலாத மானுடனே
பசு தொ(கு)ண்டர்களின் வேலையது

வேளாண் பயிர்கள்
மந்திரம் ஓத
தந்திரமாய்த் தரும்
அமோக விளைச்சல்

வர்ணாஸ்ரம மனுதர்மம்
வரமானது மானுடர்க்கு
உரமானது வாழ்க்கைக்கு

இளம்பெண் சிறுமிகள்
களம் காணும்
பாலியல் வன்மம்
உளம் விரும்பும்
காவிகளின் காலமிது
ஏவ இனி சட்டமேது

திரும்பத்திரும்பச் சொல்லியும்
விரும்பாமல் எதிர்த்தால்
தேச துரோகிகள் நீங்கள்
தேசமாளப் பிறந்தவர்கள் நாங்கள்

**- பெரணமல்லூர் சேகரன்**

## வருந்துகிறோம்



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் வட சென்னை மாவட்ட இணைச் செயலாளர் தோழர் வி.விஜயகுமார் 2.11.2018 அன்று மாரடைப்பால் காலமானார். அவரது மறைவுக்கு மாநில மையம் ஆழ்ந்த அஞ்சலி செலுத்துகிறது.

# ஜாக்டோ - ஜியோ (JACTTO-GEO)

## (Joint Action Council of Tamilnadu Teachers Organisations and Government Employees Organisations)

எண். 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005

ஜாக்டோ ஜியோவின் ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் உயர்மட்டக் குழுக் கூட்டம் 28.10.2018 அன்று சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஒருங்கிணைப்பாளர்கள் திரு. செ. முத்துசாமி, திரு. கு. தியாகராஜன் மற்றும் திரு. மு. அன்பரசு ஆகியோர் தலைமையேற்றனர். இன்றைய கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

1) மறைந்த முன்னாள் முதலமைச்சர் அவர்களால் சட்டப்பேரவை விதி எண் 110ன் கீழ் அறிவிக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள சிபிஎஸ் தொடர்பான வல்லுநர் குழு தனது அறிக்கையினை இதுநாள் வரை தமிழக அரசிடம் அளிக்காதபோது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சட்ட விதிகளுக்கு முற்றிலும் முரணாக, பழைய ஓய்வூதியத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவது சாத்தியமில்லை என்று கடந்த வாரத்தில் அறிவித்ததற்கு ஜாக்டோ ஜியோ கடும் கண்டனத்தை பதிவு செய்கிறது.
2) ஜாக்டோ ஜியோ 2018 நவம்பர் 27 முதல் நடத்தவுள்ள **காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தினை சக்தியாக நடத்திடும் பொருட்டு**, தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி அறிவித்துள்ள போராட்டத்தினை கைவிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்பட்டது. மேலும் இடைநிலை ஆசிரியர்களுக்கான ஊதியக் குழுவால் அறிவிக்கப்பட்ட அநீதியை தனிக் கோரிக்கையாகப் பட்டியலிடுவது என முடிவு செய்யப்பட்டது.
3) ஜாக்டோ ஜியோவிடமிருந்து பிரிந்து சென்ற அமைப்புகளை இணைத்து கொள்வது என முடிவு செய்யப்பட்டது. இதற்கான பேச்சுவார்த்தையினை மேற்கொள்வதற்கு பின்வரும் எட்டு ஒருங்கிணைப்பாளர்களைக் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

   திரு.க.மீனாட்சி சுந்தரம், திரு.செ.முத்துசாமி, திரு.அ.மாயவன், திரு.ச.மோசஸ், திரு.மு.சுப்பிரமணியன், திரு. கு.தியாகராஜன், திரு.இரா.தாஸ், திரு.கு.வெங்கடேசன்

   இந்தக் குழு வரும் 9.11.2018 அன்று இணைப்பு குறித்த பேச்சுவார்த்தையினை நடத்துவது, அன்றைய தினமே ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டத்தினை கூட்டுவது, மேலும் இது குறித்து முடிவு எடுப்பதற்கு 10.11.2018 அன்று உயர்மட்டக் குழுக் கூட்டத்தினை நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.
4) ஜாக்டோ ஜியோவின் உயர்மட்டக் குழுவில் பின்வரும் இரண்டு அமைப்புகள் இணைத்துக் கொள்ளப்பட்டன.

   தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி (RRE பிரிவு) மற்றும்
   அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன கல்வியாளர்கள் சங்கம்
5) ஜாக்டோ ஜியோவின் வரவு செலவுகளை சரிபார்த்து முழுமையான அறிக்கையினை 9.11.2018 அன்று நடைபெறும் ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டத்தில் வைப்பது என முடிவு செய்யப்பட்டது.
6) திருவண்ணாமலை மாவட்டம், மேல்நாச்சிப்பட்டு அரசு உயர்நிலைப் பள்ளியில் கணித பட்டதாரி ஆசிரியர் திரு. கண்ணன் அவர்கள் மீது கற்பனைக் குற்றச்சாட்டில் பள்ளி வளாகத்திலேயே மாணவர்கள் கண் எதிரிலேயே தாக்குதல் நடத்தப்பட்டதற்கு ஜாக்டோ–ஜியோ கடும் கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறது. ஆசிரியரை தாக்கியவர்கள் மீது காவல் துறை சட்ட ரீதியான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். ஆசிரியர்களுக்கு பள்ளிகளில் பாதுகாப்பினை உறுதி செய்திட வேண்டும் என ஜாக்டோ–ஜியோ வலியுறுத்துகிறது.

– ஒருங்கிணைப்பாளர்கள்

# சமூக சீர்திருத்தமே நமது மரபு

**ச**மூக சீர்திருத்த மரபு தான் நமது மகத்தான மரபு... நாம் அத்தகைய சமூக சீர்திருத்த மரபைத் தான் அடிப்படையாகக் கொண்டிருக்கிறோம். இங்குமேலோங்கி நிற்கும் சமூகசீர்திருத்த இயக்கங்கள் அனைத்தும் ஸ்ரீ நாராயண குரு, சட்டம்பி சுவாமிகள் போன்றவர்களால் தலைமை தாங்கி வழிநடத்தப்பட்டவை. அதனால்தான் “ஒரு பைத்தியக்காரர்களின் கூடாரம்”, என்று விவேகானந்தரால் விமர்சிக்கப்பட்ட கேரளம் மாநிலம், இன்று மத பேதமற்ற, ஜாதி பேதமற்ற சமூகமாகமுன்னேறி நாட்டிற்கே முன்னுதாரண மாக திகழ்கிறது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.இங்கே நமது நாட்டின் வரலாற்றை எடுத்துக்கொண்டாலும், நமது மாநிலத்தின் வரலாற்றை எடுத்துக்கொண்டா லும், எந்த காலகட்டங்களில் எல்லாம் சமூக சீர்திருத்தக் கருத்துக்கள் உருவெடுத்தனவோ அந்த காலகட்டங்களில் எல்லாம் அதற்கெதிரான ஒரு பகுதியினரும் களத்திலிறங்கி இருக்கிறார்கள். அந்த பிரிவினரில் பிற்போக்கு சக்திகள் மட்டும் பங்கெடுக்கவில்லை. சமூக சீர்திருத்தங்கள் மூலம், உரிமைகள் அடைய வேண்டிய, நன்மைகளைப் பெற வேண்டிய, பலனடைய வேண்டிய பிரிவினர் யாரோ அவர்களையே, சமூக சீர்திருத்த இயக்கங்களுக்கு எதிராக அணி வகுக்கும்படி செய்வது காலம் காலமாக பிற்போக்கு சக்திகளால் மேற்கொள்ளப்படுகிறது. தற்போதும் அதுதான் நடக்கிறது.நமது நாடு பார்த்த மிகக் கொடூரமான சடங்கு, சதி என்ற ஒன்றாகும். கணவர் இறந்துவிட்டால், மனைவியை கணவரின் அந்த சிதையில் தள்ளிவிடும் வழக்கம்....ஒரு மூட நம்பிக்கை. அந்த சதி என்ற வழக்கத்திற்கு எதிராகசட்டம் இயற்றப்பட்டது. அது சமூக சீர்திருத்த இயக்கங்களின் பலனால் மட்டுமே நடந்தது. நாம் இதில் கவனிக்க வேண்டியது என்னவெனில், அன்றைய கணக்குப்படி 1813 முதல் 1829 வரையிலான காலகட்டத்தில் 8135 பெண்கள் சிதையில் குதித்து உயிரிழந்தார்கள். அந்த வழக்கம் இன்றும்தொடர்ந்திருந்தால், எத்தனை ஆயிரம், எத்தனை லட்சமாகியிருக்கும் என்று கணக்கிட்டு பார்த்துக் கொள்ளலாம்... என்ன ஆகியிருக்கும் நமது நாட்டின் நிலைமை? ஆனால்இந்த சடங்கின், மூடநம்பிக்கையின் பெயரில், இந்த வழக்கத்திற்கெதிராக சட்டம்



இயற்றப்பட்ட பிறகும், பெண்கள் இதுபோன்று சிதையில் குதிக்க முயன்றார்கள்....சிலர் குதிக்கவும் செய்தார்கள். அதற்கெதிராக பெரிய எதிர்ப்புகளும் கிளம்பின.இ.எம்.எஸ், வி.டி, எம்.ஆர்.ஜி, பிரேம்ஜி போன்றவர்கள் எல்லாம் அன்றைய பிராமண சமுதாயத்திலிருந்த தவறான வழக்கங்களுக்கு எதிராக எதிர்ப்புப் போராட்டகளைத் தொடங்கினர்.

அதன் பகுதியாக விதவை மறுமணம் சாத்திய மாகும் நிலை வந்தது. அதுபோல, அன்றைய சமூகத்தில் இருந்த வித்தியாசமான சூழலின் அடிப்படை யில் இளம்பெண்களை, அதாவது பருவமடைவதற்கு முன்பாகவே, சிறுமிகளை படுகிழவர்களுக்கு மணம் முடித்துவந்தார்கள். அந்த சிறுமிகள் பருவமடைவதற்கு முன்பே அந்த கிழவனின் கதை முடிந்துவிடும். பின்பு அந்தச் சிறுமி தலை மொட்டையடிக்கப்பட்டு இருட்டறையில் அடைந்து கிடக்க வேண்டும். அதற்கெதிராக முன்பு குறிப்பிடப் பட்டவர்கள் எல்லாம் போராட்டம் நடத்தத் துணிந்த போது அவர்களை ஜாதி விலக்கம் செய்ய முடிவெடுத் தார்கள். பயமுறுத்தினார்கள். பிற்போக்காளர் களின் கடுமையான எதிர்ப்பும் இருந்தது.நமது நாட்டில் சில இடங்களில் மனிதப்பலி கொடுக்கும் முறை இருந்தது. பின்னர், அது மிருகப்பலியாக மாற்றப் பட்டது. மிருக பலியும் செய்யக்கூடாது

என்ற நிலை வந்த போது தான் மஞ்சளும் சுண்ணாம்பும் சேர்த்து கலக்கி இரத்தம் போன்ற திரவத்தை உருவாக்கி அடையாள ரீதியாக பலியிடும் முறை வந்தது.இதெல்லாம் சடங்கு களில் ஏற்பட்ட மாற்றங்களாகும். நமது நாட்டில், நமது மாநிலத்தில் என்னவெல்லாம் வகையிலான மாற்றங்கள்? வழக்கங்கள் என்பது மரபுவழியாக கடைப்பிடிக்கப்படுபவை ஆகும். அது கால கட்டங்கள் தோறும் மாற்றமடையும். ஒரு காலத்தில் இருப்பது பின்வரும் காலங்களில் இருக்கவேண்டும் என்பதில்லை.முன்பெல்லாம் கோவிலில் நுழைவது என்றால், கோவில் குளத்தில் நன்றாகக் குளித்து, அந்த ஈரத்துணியுடன் தான் செல்லவேண்டும். இப்போது, எல்லோரும் அப்படியா கோவிலுக்குள் நுழைகிறார்கள். உடலை தங்கள் வசதிக்கேற்ப சுத்தம் செய்து கொள்ளுகிறார்கள். ஆனால், கோவிலில் அப்படியே தானே நுழைகிறார்கள்?முன்பு பெண்களின் விஷயத்தில் என்னவெல்லாம் கட்டுப்பாடுகள் இருந்தது? மாதவிடாய் வந்துவிட்டால். அந்தப் பெண்களுக்கு வீட்டில் கூட இருக்கமுடியாது. வசிக்குமிடத்திலிருந்து வெளியே செல்ல முடியாது. வீட்டிலிருந்து தனியே வேறொரு இடத்தில் அதற்கென கட்டப்பட்ட கட்டிடத்தில் தான் தங்கிக்கொள்ள வேண்டும்....ஆனால் இப்போது? எல்லாம் மாற்றங்கள் அல்லவா..? நமது கண் முன்னே ஏற்பட்ட மாற்றங்கள் அல்லவா? முன்காலத்தில் பிரசவம் நடந்தால் ‘வாலாய்மை” (பிரசவ நேரத்தில் அசுத்தம் என்ற பெயரில் கடைப் பிடிக்கப்பட்ட தீட்டு). மரணம் நடந்தால்... குடும்ப உறுப்பினர்கள் இறந்தால் “புலை” (இறப்பினால் ஏற்படும் தீட்டு)..எத்தனை நாட்கள் அதற்கு...?ஆனால் இப்போதோ மரணம் நடந்து சவ அடக்கம் முடிந்தவுடன், ஒருவர் கூறு வார்,”எல்லா காரியங்களும் இத்துடன் முடிந்து விட்டது.

கலைந்து செல்பவர்கள் கலைந்து செல்ல லாம்.”என்று.... எல்லோரும் கலைந்து செல்கிறார்கள். இதுதானே சடங்குகளின் நிலைமை?மாற்றங்கள் நிகழும் போக்கை நாம் பார்க்கவேண்டும் அல்லவா? இத்தகைய மாற்றங்கள், முன்பு சொன்ன சமூகசீர்திருத்த நாயகர்களின் தலையீட்டினால் ஏற்பட்டது தானே?இங்கே முன்பு மார்பு மறைக்க உரிமை இல்லை அல்லவா? அவ்வாறு மார்பு மறைக்க உரிமையில்லாத காலகட்டத்தில் அதற்கு எதிராக போராட்டம் நடத்தப்பட வில்லையா? அவ்வாறு மார்பு மறைத்து, கோவிலில் நுழையும் உரிமை கிடைத்த பிறகும் கூட அந்த உரிமையை சீர்குலைப்பதற்கான போராட்டங்கள் நடக்கவில்லையா இங்கே..? பெண்களே கூட அதற்கெதிராக களமிறங்கினார்கள்... அதோடு மார்பு மறைத்தவர்களின் மாராப்பை, மார்பு மறைக்காத பெண்களே கிழித்தெறியத் துணிந்தார்கள்.இதெல்லாம் நமது மாநிலத்தின் வரலாறல்லவா? ஆனால், நாம் அங்கேயே நின்று கொண்டிருக்கிறோமா? ‘எங்களுக்கு மார்பை மறைக்க வேண்டாம்’ என்று கூறிய பெண்க ளுடனா இந்த நாடு நின்றது...? காலம் அவர்க ளுடனா நின்றது...? காலத்தின் மாற்றங்களுக்கு ஏற்ப சடங்குகளும் வழக்கங்களும் மாறுவ தில்லையா? முன்பு, இங்கே பெண்களுக்கு சொத்துரிமை இருந்த தில்லை. பெண்களுக்கு சொத்துரிமை கொடுக்கப்பட்டது பெரிய மாற்ற மாக இருக்கவில்லையா? நமது சமூகத்தின் முன்னேறிய பகுதியினர் அதனை ஏற்றுக் கொண்டார்களா? பிற்போக்கு சக்திகள் அதற் கெதிராக நிற்கவில்லையா? சுருக்கமாகச் சொன் னால், என்னென்ன சமூக சீர்திருத்த இயக்கங்கள் நடந்துள்ளனவோ அந்த கட்டங்களில் எல்லாம் அதற்கெதிராக கடுமையான எதிர்ப்புகளும் ஏற்பட்டுள்ளன.முன்பிருந்த நிலை என்னவாக இருந்தது? பிராமணர்களிடமிருந்து 64 அடி தூரத்தில் பறையர் நிற்க வேண்டும். 54 அடி தூரத்தில் புலையர் நிற்க வேண்டும். 36 அடி தூரத்தில் ஈழவர் நிற்க வேண்டும். ஈழவர் களிடத்திலும் தீண்டாமை வழக்கமிருந்தது. ஈழவர்களிடமிருந்து 30 அடி தூரத்தில் புலையர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் நிற்க வேண்டும். என்னவெல்லாம் தவறான பழக்கவழக்கங்கள் நமது மாநிலத்தில் நடைமுறையில் இருந்தன? அப்போதும் சமூக சீர்திருத்த இயக்கங்களின் பலனாகத்தானே, இவையெல்லாம் மாறின? அதற்கு உறுதியான தொடர்ச்சிகளும் ஏற்பட்டன. நமது மாநிலத்தில்மேலோங்கி வந்த பல்வேறு இயக்கங்கள் விவசாயிகளின் இயக்கம், தொழிலாளர்களின் இயக்கம், இடதுசாரி இயக்கம் போன்றவற்றின் தலையீடுகள், இந்த சமூக சீர்திருத்தக்கருத்துக்களை எல்லாம் உள்வாங்கிக் கொண்டு முன்னேறிச் சென்றன.

அதுதானே இந்த மாநிலத்தை மாற்றின? இந்த மாநிலத்தின் இதுபோன்ற மாற்றங்களை உள்வாங்க முடியாதஒரு நிலை இப்பொழுதும்

உள்ளன என்பதையும் நாம் பார்க்க வேண்டும்.ஸ்ரீ நாராயண குரு, அய்யன் காளி, சட்டம்பி சாமிகள்போன்றவர்களின் வரிசையில் உட்படு பவர்கள்தான் அய்யா வைகுண்டரும் பொய்கை யில் குமார குருதேவனும் எல்லாம். இவர்களால், இந்த மாநிலத்தில் நடைமுறையில் இருந்த மூடநம்பிக்கைகள் நீங்கியதால் வந்த ஒளி தான் இப்போது கேரளத்தில் வீசுகின்றது.நாம் அதில் பார்க்க வேண்டியது என்னவென்றால், அவர்கள் எல்லோரும் 'சடங்குகளை மீறுவதற்காகத்தான் நிலைப்பாடு கொண்டிருந்தார்கள்' என்பதைத் தான். ஸ்ரீ நாராயண குரு அருவிப்புறத்தில் சிவபிரதிஷ்டை நடத்திய சம்பவம்... உண்மையில் அது ஒரு சடங்கு மீறல் அல்லவா? அப்போது "உங்களுக்கு இதைச் செய்ய என்ன உரிமை?" என்று அவரிடம் கேட்டார்கள் அல்லவா? அதற்கு குரு என்ன பதில் கூறினார்...? "நாம் பிரதிஷ் டித்தது பிராமணர்களின் சிவனை அல்ல...நமது சிவனைத்தான் நாம் பிரதிஷ்டித்துள்ளோம்" அங்கு சடங்கு மீறல் தான் நடத்தப்பட்டது. அதன்பிறகு, அதே குரு. "இனி கோவில்களையல்ல... பள்ளிக்கூடங்களைக் கட்டுவது தான் மக்களுக் கான தேவை" என்று தானே சொன்னார்.

அங்கேயும் சடங்கு மீறல்கள் தானே தென்படுகிறது? அப்படியென்றால், சடங்குகள் மீறப்பட வேண்டியது என்று தான் அவர்கள் நமக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள். இதை நாம் நினைவில் இருத்த வேண்டும். அய்யன் காளியின் வில்வண்டிப் போராட்டத்தைப் பாருங்கள்... பொட்டு வைத்து, பட்டுத் தலைப் பாகை வைத்து,கோட்டு அணிந்து.... அன்று அதற்கெல்லாம் உரிமை இருந்ததா? பொட்டு வைக்க உரிமை இருந்ததா? பட்டுத் தலைப்பாகை வைக்க உரிமை இருந்ததா? கோட்டுஅணிய உரிமை இருந்ததா? அப்படியென்றால், உரிமை யில்லை என்று சொன்னவர்களின் சட்டத்தோடு சேர்ந்து நிற்காமல், 'எங்களுக்கு உரிமை உண்டு' என்று கூறி, அந்தஉரிமையை நிலைநாட்டு வதற்காகத் தான் நின்றார்கள்.கடந்த வருடம் என்று தான் நினைக்கிறேன்... இங்குள்ள ஊரூட்டம்பலம் ஆரம்பப்பள்ளிக்குச் சென்ற போது, அங்கே பாதி எரிந்துபோன பெஞ்சை நான் பார்க்க நேர்ந்தது. அது... எந்த பெஞ்சு தெரியுமா? பஞ்சமி என்ற தாழ்த்தப்பட்ட சமூகச் சிறுமியைப் பள்ளியில் அமரவிடவில்லை என்று கேள்விப் பட்ட போது, அந்த சிறுமியையும் அழைத்துக் கொண்டு, அய்யன்காளி தட்டிக் கேட்க வருகிறார் என்று கேள்விப்பட்ட மேல்ஜாதியினர் அந்த பள்ளிக்கே தீ வைத்தார்கள். அதில் முற்றும் எரிந்து போன பள்ளியிலிருந்து, எஞ்சிய இந்த எரிந்த, துண்டு பெஞ்சு மட்டும் கிடைத்தது. அதைத்தான் நான் அங்கு காண நேர்ந்தது. அவ்வாறு நமது மாநிலத்தில் வெவ்வேறு போராட்டங்கள் நடந்துள்ளன.

அப்படித்தான், நாம் இன்று காணும் கேரளம் உருவானது. அடையாளத்திற்காக மேல்ஜாதி யினரால் அணிய வைக்கப்பட்ட கல் மாலையை அறுத்தெறிய நடத்தப்பட்ட போராட்டம்... உடன் அமர்ந்து படிக்க நடத்தப்பட்ட போராட்டம்... படித்த பிறகு... வேலைகிடைப்பதற்கான போராட்டம்... பாதையில் நடப்பதற்கான உரிமை கேட்டு நடத்தப்பட்ட போராட்டம்... கோவிலுக் குள் நுழைந்து வழிபடுவதற்கான போராட்டம்... இத்தகைய வெவ்வேறு போராட்டங்கள் மூலம் தான், நாம் இன்று காணும் கேரளம் உருவானது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.இங்கே பாரதிய ஜனதா கட்சி நாட்டையாளும் கட்சி யல்லவா? அக்கட்சியின் நிலைப்பாட்டை தனியாக நாம் பரிசீலிக்கவேண்டும். மகாராஷ்டிரா வில் சனி தேவனின் ஒரு திருத்தலம் உள்ளது. ஒரு கோவில். அங்கு சனிதேவன் இருக்கிறார் என்று சொல்கிறார்கள். சனி சிக்னாபூர் என்பதுதான் அந்தக் கோவிலின் பெயர். அந்தக் கோவிலில் எக்காலத்திலும் பெண்கள் நுழைந்த தில்லை. பெண்கள் அக்கோவிலுக்குள் செல்லவே கூடாதாம். சனிதேவன் பெண்களைப் பார்க்கவே கூடாது என்பது தான் அங்குள்ள நிலைமை. இந்நிலையில் மும்பை உயர்நீதிமன்றம் 'பெண் களுக்கு கோவிலுக்குள் செல்ல உரிமை உண்டு' என்று தீர்ப்பளித்தது. அங்கே பாஜக அரசுதான் உள்ளது. அவர்கள் அந்தத் தீர்ப்பை அமல்படுத்தி னார்கள். இப்போது பெண்கள் அந்தக் கோவி லுக்குச் செல்கிறார்கள். அப்படியென்றால், பாஜக ஆளும் மாநிலத்தில் நீதிமன்றத் தீர்ப்பை அமல்படுத்தலாம். பாஜக ஆட்சியில் இல்லாத மாநிலத்தில், இடது ஜனநாயக முன்னணி ஆளும் மாநிலத்தில், உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பே வந்தாலும் அமல்படுத்தக் கூடாது என்று எதிர்ப்புப் போராட்டம் நடத்துகிறார்கள். இது என்ன மாதிரியான இரட்டை நிலைப்பாடு? அங்கே அதுபோலவே உச்சநீதிமன்றத்தின் இன்னொரு தீர்ப்பு... மும்பைக்கு அருகே ஹாஜி அலி தர்கா... அங்கே பெண்களை செல்ல அனுமதிக்கவேண்டுமென்று மனு கொடுக்கப்

பட்டதன் அடிப்படையில், நீதிமன்றம் பெண்கள் அந்த மசூதியில் செல்ல அனுமதித்தது. அந்த மசூதியில் பெண்கள் செல்கிறார்கள். இதெல்லாம் மகாராஷ்டிராவில் நடந்த விஷயங்களாகும். அதோடு இடதுமுன்னணி அரசு சமூக சீர்திருத்த பாரம்பரியத்தின் அடிப்படையிலான நடவடிக்கை களைத் தான் மேற்கொண்டு வருகிறது.

நமது கோவில்களில் பிராமணர்கள் அல்லாத வர்களும் பூசாரிகள் ஆகலாம். அது, நமது தேசமே பெரும் ஆதரவளித்து வரவேற்ற ஒன்றாகும். சாதாரணமாக எல்லோரும் பூசாரிகள் ஆகிவிட முடியாது என்பது போன்ற, மேல்ஜாதி ஆதிக்கம் நிறைந்த விதிமுறைகளை எழுதியவர்கள் உட்பட எல்லோரும், "எல்லா ஆகமங்களையும் கற்றுத் தேர்ந்தால் பூசாரி ஆவதற்கு தடையேது மில்லை" என்ற நிலைப்பாட்டை முன்வைத்தபோது ஏற்றுக்கொண்டார்கள். அதுபோலவே தான், அறநிலையத் துறை ஊழியர்களின் நியமனத்தில் பட்டியலினத்தவர்கள், மலைவாழ் இனத்தவர்கள், பிற்படுத்தப்பட்டவர்களுக்கான இடஒதுக்கீடு சதவீதத்தை உயர்த்தினோம். உயர்வகுப்பின ரில் பொருளாதார ரீதியாக பின்னடைந்துள்ள வர்களுக்கு, அறநிலையத்துறை ஊழியர் நியமனத் தில் தனியாக இடஒதுக்கீடு செய்யும் ஒரு முறையையும் மாநில அரசு அமல்படுத்தியது. இதெல்லாம், சமூக சீர்திருத்த மரபின் அடிப் படையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் ஆகும்.இங்கே காங்கிரசார் எண்ணிப்பார்க்க வேண்டிய விஷயம் என்னவென்றால், கட்சிக் கொடியின்றி பாஜக தலைமை தாங்கும் போராட்டத்தில் பங்கேற்றால், நீங்கள் காங்கிரஸ் அல்ல என்று ஆகிவிடுவீர்களா..? ஆமாம்... காங்கிரஸ் இல்லையென்று ஆகிவிடும் நிலை உங்களுக்கு நிச்சயம் ஏற்படும். நாளை அவர்கள் பாஜக ஆகிவிடுவார்கள் என்று தெரிந்து கொள் ளுங்கள். காங்கிரசுடன் இணைந்து நிற்பவர்கள் கவனிக்க வேண்டிய ஒரு விஷயம் இருக்கிறது. அது அரசியலமைப்புச்சட்டம் பற்றிய ஆர்.எஸ்.எஸ்-ன் பார்வை ஆகும். அரசிய லமைப்புச் சட்டத்தைத் தகர்க்க வேண்டுமென்று தான்ஆர்.எஸ்.எஸ் நினைக்கிறது. அதை அவர்கள் வெளிப் படையாகவே கூறுகிறார்கள். இந்திய நாடாளுமன்றத்திலேயே கூறி விட்டார்கள். ஆனால் இப்போது ஒரு வாதம் முன்வைக்கப் படுகிறது. அந்த வாதத்தை காங்கிரசாரும் உயர்த்திப்பிடிக்கிறார்கள். அது, "எல்லாவற்றை யும் விட உயர்ந்தது நம்பிக்கையே ஆகும். நம்பிக்கையே முக்கியம். அரசியலமைப்புச் சட்டத்தின் மதிப்புமிக்க அம்சங்களை விட சட்டங்களைவிட நம்பிக்கையே முக்கியம்" என்பதாகும்.இந்த வாதத்துடன் இணைந்து நிற்பவர்கள் அதன் பின்னால் மறைந்திருக்கும் ஆபத்தை சரியான விதத்தில் புரிந்து கொண் டிருக்கிறார்களா?இந்திய யூனியன் முஸ்லிம் லீக் இந்த வாதத்துடன் அணி திரள்வதாக செய்திகள் வருகின்றன. முஸ்லீம் லீக் தலைவர்களும் உணர்ச்சிவசப்பட்டு இந்த வாதத்துடன் அணி வகுக்கிறார்கள். நீங்கள் இந்த வாதத்தை கொஞ்சம் விரிவுபடுத்திப் பாருங்கள்.

பாபர் மசூதி விவகாரத்தில்...எங்கே போய் முடியும்? நம்பிக்கைதான் முக்கியம் எனில், இராமர் கோவில்தான் அது என்று கூறும் நம்பிக்கையோடு அல்லவா இணைந்து நின்றிருக்க வேண்டும். ஆர்.எஸ்.எஸ்-ம் அந்த வாதத்தோடு தான்... பாஜகவும் அந்த வாதத்தோடு தான்... காங்கிரசும் மிகச்சரியாக அந்த வாதத்தோடு தான், அக்காலத்தில் நின்றார்கள் என்று எல்லோருக்கும் தெரியும்... இந்த வாதத்தின் பின்னால் உள்ள ஆபத்து என்னவென்று சரியான முறையில் யார் புரிந்து கொண்டிருக்கிறார்கள்? நமது நாட்டில், சங் பரிவாரங்கள் உரிமை கொண்டாடுவது ஒரு பாபர் மசூதியின்மீது மட்டுமல்ல. இந்தியாவில் உள்ள ஏராளமான வழிபாட்டுத்தலங்கள் மீது அவர்களின் உரிமைவாதம் இருக்கிறது. இதுஎங்களது ஆராதனாலயம் என்று கூறுகின்ற உரிமை வாதத்தை முன்வைக்கிறார்கள்.எல்லாமே நம்பிக்கையின் அடிப்படையிலானது என்றால் நாளைய எதிர்காலம் என்னவாகும் என்று... நிதானமாக சிந்தித்தால் போதும்... சிந்திக்க முடிந்தால்... இவ்வாறு நம்பிக்கையின்பால் அடித்துச் செல்லப்பட்டவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்பதை மட்டும் நாங்கள் உங்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்பு கிறோம்... நாம் கவனமாகப் பார்க்க வேண்டிய விஷயம் என்ன வெனில், எது அவர்களின் குறிக்கோள் என்பதே.. அரசைத் திட்டுவதோ... இடதுஜனநாயக முன்னணியைத் திட்டுவதோ அல்ல... மாறாக அவர்களின் உண்மையான நோக்கம் கேரளத்தின் மதசார்பற்ற சிந்தனையைத் தகர்ப்பதே ஆகும்.

அதை அனுமதிக்க வேண்டுமா? என்பதே நமக்கு முன் உள்ள கேள்வி. அதை அனுமதிக் கவே முடியாது. நாம் உறுதியாக இத்தகைய முன்னெடுப்புகளை எதிர்த்து நின்று போராடி

யிருக்கிறோம். மதசார்பற்ற சிந்தனைகளை எதிர்க்கவும், மதசார்பற்ற எண்ணங்களை தகர்க்கவும் நடத்தப்படும் முயற்சிகளை, நாம் எல்லோரும் இணைந்து முறியடிக்க வேண்டும். மதநம்பிக்கையாளர்கள் உட்பட உள்ள அனை வரும், அதற்காக அணிதிரண்டு களத்திலிறங்கிப் போராட வேண்டுமென்று இந்நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன் வாழ்த்துக்கள்...!

*(16.10.2018 அன்று திருவனந்தபுரத்தில் நடந்த இடது ஜனநாயக முன்னணி கொள்கை விளக்கப் பொதுக்கூட்டத்தில் கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் ஆற்றிய உரையிலிருந்து...)*

நன்றி : **தீக்கதிர்**

## தூத்துக்குடி மாவட்ட நிர்வாகத்தை கண்டித்து ஆர்ப்பாட்டம்

**தூ**த்துக்குடி மாவட்டத்தில் கடந்த மே மாதம் நடைபெற்ற ஸ்டெர்லைட் எதிர்ப்புப் போராட்டத் தில் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அலுவர்களின் வாகனங்கள் சேதமடைந்து தீக்கிரையானது. வாகனங்களுக்கு இழப்பீடு கேட்டும், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளரும், மாவட்ட வருவாய் அலுவலரும் இச்சம்பவம் தொடர்பாக வேலை பார்க்கும் அலுவலரிடம் மிரட்டி பிரமாண பத்திரத்தில் கையொப்பமிட முயற்சித் ததை கண்டித்தும் தமிழ்நாடு வருவாய்த் துறை அலுவலர் சங்கமும தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர் சங்கமும் இணைந்து 30.10.2018 அன்று ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு செய்யப் பட்டது. ஆனால், காவல் துறை அனுமதி இல்லை என்று கூறி போராட்டத்திற்கு மறுத்தது.

எங்கள் அலுவலகத்தில் நாங்கள் ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு எதற்கு அனுமதி வாங்க யாரிடமும் செல்ல வேண்டிய அவசியமில்லை என்று கூறி அலுவலத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. உடனடியாக ஆட்சியரின் உத்தரவுப்படி வாயிற் கதவு மூடப்பட்டது. பல்வேறு இடங்களிலிருந்து வந்த ஊழியர்கள் வாயில் வெளியே இருந்தனர். இருந்தாலும் காவல் துறையின் கெடுபிடியை மீறி உள்ளேயும் வெளியும் என 2 இடங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பின்னர் ஆட்சியரின் உத்தரவுப்படி கேட் திறக்கப்பட்டதும் அனைவரும் இணைந்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆட்சியர் சங்கத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதாக கூறியதையடுத்து அங்கு சென்ற நிர்வாகிகள் தங்களின் கோரிக்கைகளை முன்வைத்தனர். இதுகுறித்து ஆவன செய்வதாக மாவட்ட ஆட்சியர் உறுதியளித்தார்.


பேச்சுவார்த்தைக்கு பின்னர் நடைபெற்ற கூட்டத்திற்கு மாவட்டத் தலைவர் ஞா.கலை யரசன் தலைமையேற்றார். இந்நிகழ்வில் வருவாய்த் துறை அலுவலர் சங்க மாநில பொதுச் செயலாளர் சு.பார்த்திபன், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநிலத் தலைவர் மு.சுப்பிர மணியன் மற்றும் மாநிலச் செயலாளர் சி.ஆர்.ராஜகுமார் ஆகியோர் உரையாற்றினர். மாவட்டச் செயலாளர் ந.வெங்கடேசன் நன்றி கூறினார். ◁

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நிர்வாக ஊழியர் சங்க பேரவை





சங்கத்தின் மாநில பேரவை மற்றும் பொதுக்குழுக் கூட்டம் 27.10.2018 அன்று செங்கல்பட்டில் மாநிலத் தலைவர் இரா.சுந்தர் தலைமையில் நடைபெற்றது. இதில் 300-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். பின்னர் நடைபெற்ற நிர்வாகிகள் தேர்வில் மாநிலத் தலைவராக இரா.சுந்தர், துணைத் தலைவர்களாக கி.ஜே.வெற்றிகுமார், அ.மனோகரன், சு.விஜயலட்சுமி, நா.ஜெயக்குமார், மு.சிவக்குமார்,. பா.பாபு, பொதுச் செயலாளராக க.ராஜசேகரன், மாநில அமைப்புச் செயலாளராக ஜா.வே.அருள்டேனியல், இணைச் செயலாளர்களாக சு.பக்கீர்முகமது, த.அன்புராஜா, க.ரா.விஜயகுமார், பா.உமாசங்கர், சி.சரவணகுமார், மு.வாஞ்சிநாதன், பொருளாளராக ப.அன்பழகன், தணிக்கையாளர்களாக தா.பாஸ்கரன், ப.செந்தில்குமார் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். ◁



# சம காலத்தில் பெரியாரும் அம்பேத்கரும்..

*"நம் மக்கள் சமுதாயமானது பல சாதி பல மதம், பல பிரிவாக இருக்கிறது. நம் நாட்டில் இருக்கும் மனித சமுதாய பேதம் ஒழிய வேண்டும், இதை எவனோ ஒருவன் செய்யட்டும் என்று இருக்கக்கூடாது; ஒவ்வொருவரும் நமது சமுதாயத்திற்காக ஏதாவது செய்ய வேண்டும் என்று கருத வேண்டும்."*

*- தந்தை பெரியார்*

*அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார் ஆகிய இருவரும் 19ஆம் நூற்றாண்டில் இருபெரும் சமூகப் புரட்சியாளர்களாகத் தோன்றி இந்திய சமூகத்தில் புரை யோடியிருந்த சாதியத்திற்கு எதிராகக் களமாடினர். இந்த இருவரும் இன்றும் அவர்களின் சிந்தனை வடிவில் தொடர் போரினை நிகழ்த்தி வருகின்றனர் எனின் மிகையன்று.*

*தந்தை பெரியார் செப்டம்பர் 17, 1879இல் பிறந்து 95 ஆண்டுகள் வாழ்ந்து டிசம்பர் 24, 1973இல் மறைந்தார். அண்ணல் அம்பேத்கர் ஏப்ரல் 14, 1891இல் பிறந்து 65 ஆண்டுகள் வாழ்ந்து டிசம்பர் 6,1956இல் மறைந்தார்.*

*இந்தியத் தலைவர்களை அண்ணல் அம்பேத் கருடன் ஒப்பிட்டால் முறைசார்ந்த கல்வியைப்*

**பெரணமல்லூர் சேகரன்**

*பல போராட்டங்களுக்கு இடையே பெற்று அமெரிக்கா-இங்கிலாந்து பல்கலைக்கழகங்களில் பலர் வியக்கும் வண்ணம் முனைவர் பட்டங் களைப் பெற்றவர். ஆய்வின் உச்சத்திற்கே சென்று சிறந்த படைப்புகளை உலகிற்கு வழங்கியவர். கொடுமைக்குள்ளான தாழ்த்தப்பட்ட சமுதாயத் தில் பிறந்து வாழ்க்கை முழுவதும் உயர் சமுதாயத் தினரோடு போராடிப் பெரும் சாதனைகளைப் படைத்தவர்.*

*தந்தை பெரியார் பள்ளிப்படிப்பையே தொடராதவர். இருப்பினும் பட்டறிவால்-பகுத்தறிவால் உயர்ந்தவர். 75 ஆண்டுகள் ஆதிக்க சமூகத்தினருக்கு எதிராக இயக்கம் கண்டு தொடர் போராட்டத்தை நடத்தியவர். 1920ஆம் ஆண்டுகளில் விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டு சென்னை மாகாணத்தின் காங்கிரசு இயக்கத்தின் செயலாளராக, தலைவராக வலம் வந்தவர்.*

*காங்கிரசு இயக்கத்தில் உயர்சாதியினரால் கடைப்பிடிக்கப்பட்ட வருணாசிரமக் கொள் கைக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தியவர்.*

தந்தை பெரியார் கண்ட இயக்கத்தின் தாக்கமும், அண்ணல் அம்பேத்கரின் கருத்தியலும் இன்றளவும் அனைத்துத் துறைகளிலும் காலத்தின் தேவை கருதி விவாதிக்கப்படுகின்றன. சான்றாக அண்ணல் அம்பேத்கரின் நூலான சாதியை அழித் தொழித்தல் (Annihilation of Caste) ஆங்கிலத்தில் 1944இல் வெளியிடப்பட்டவுடன், 1500 படிகள் இரண்டு மாதங்களுக்குள் விற்றுவிட்டன. தந்தை பெரியார் 1925இல் தொடங்கிய குடிஅரசு வார இதழ் தமிழகத்தில் அதிகம் விற்ற ஏடுகளில் ஒன்றாகும்.

ஆனந்த விகடன் இதழின் தொடக்க இதழ் விளம்பரம் குடிஅரசு வார இதழில் வெளியானது. 1.7.1974இல் 'பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள்' திருச்சி வே.ஆனைமுத்து அவர்களால் வெளி யிடப்பட்ட சில ஆண்டுகளிலேயே அனைத்துப் படிகளும் விற்றுவிட்டன. 20 தொகுதிகள் அடங்கிய நூலின் இரண்டாம் பதிப்பு 2010இல் வெளி வந்து சில நாள்களிலேயே விற்றுவிட்டன. அண்ணல் அம்பேத்கரின் அனைத்து தொகுப்பு களும் மராட்டிய மாநில அரசால் 1979 முதல் 1989க்குள் ஆங்கில மொழியில் வெளியிடப்பட்டுச் சில மாதங்களிலேயே விற்று தீர்ந்துவிட்டன.

இந்து மத சனாதனிகள் பலர் இந்நூலின் பல படிகளை வாங்கி எரித்துவிட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்விரு தலைவர்களும் இந்துமத சனாதனவாதிகளுக்குத் தொடர் தொல்லை தருபவர்களாகவே இருக்கின்றனர். எவ்வளவு இடர் தந்தாலும் இந்த இரு சிந்தனை யாளர்கள் மீண்டும் மீண்டும் எழுகின்றனர். சாதியத்தைத் தகர்க்கின்றனர். எடுத்துக்காட்டாக நடுவண் அரசின் உயர்கல்வி நிறுவனமான இந்தியத் தொழில் நுட்பக் கழகத்தில் (IIT, சென்னை) இந்தப் புரட்சியாளர்கள் பெயரில் அமைக்கப்பட்ட வாசகர் வட்டத்திற்குத் தடை விதிக்கப்பட்டது. தடையும் தகர்க்கப்பட்டது.

இந்நிகழ்வுகளிலிருந்தே ஆதிக்க சமூகத்தினரும் பிற்போக்குவாதிகளும் இந்த இருவர் இணைவதை எப்படிப் பார்க்கிறார்கள் என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. பெரியாரும் அம்பேத்கரும் சாதி ஒழிப்புக் களத்தில் இன்றும், என்றும் தேவைப்படுவார்கள் என்பதற்கு இவைகள் சான்று பகர்கின்றன.

சாதி மதம் கடவுள் இவை இந்தியச் சமூகத்தில் ஒன்றோடொன்று வலிமையான முறையில் பிணைக்கப்பட்டுள்ளன. மற்ற நாடுகளில் மதம் தனித்தே நிற்கிறது. மேலும் இங்கு சமூக அடித் தளம் பொருளாதார வளர்ச்சியில் பெரும் பான்மையோர் பங்கு பெறுவதையே தடை செய்கிறது. இதைச் சுட்டுவதற்காக அம்பேத்கர் தனது நூலில் சமதர்மக் கொள்கைத் திட்டங்கள் வழியாக ஒரு சமத்துவ சமுதாயத்தைக் கட்டி யமைக்க முடியும் என்று மேற்கத்திய நாடுகளின் பாணியில் சமதர்மவாதிகள் தங்களின் கொள்கை களை எடுத்துரைக்கின்றனர் பின்பற்றுகின்றனர்.

சாதிய அடிப்படையில்தான் சமூகத் தகுதி மேலாதிக்கம் உருவாகிறது. இந்திய சொத்துரி மையே சாதிய அடிப்படையில்தான் உருவாகியது. சாதிய ஏற்றத்தாழ்வுகளுக்கு ஏற்ப சில தொழில் களும் பாகுபாடு செய்யப்பட்டன. இங்குள்ள சமூகத்தில் ஏணிப்படிக்கட்டு அடுக்கு முறை சாதிய அமைப்பு கோலோச்சுகிறது. இதன் வழியே சமூகத்தின் பெரும்பான்மையோர் மீது ஒடுக்கு முறை நிரந்தரப்படுத்தப்படுகிறது. "இந்து என்கிற பெயரே ஒரு வெளிநாட்டான் இட்ட பெயர். முகமதியர்களால், தங்களை வேறுபடுத்திக் காட்டிக் கொள்வதற்காக அளிக்கப்பட்ட பெயர். இந்தியத் துணைக் கண்டத்தில் இசுலாமியர் படையெடுப்புக்கு முன், இந்து என்ற சொல் எந்த சமஸ்கிருத நூலிலும் இடம் பெறவில்லை" என்கிறார் அம்பேத்கர்.

எனவே இந்து சமூகம் என்ற ஓர் அமைப்பே கிடையாது. சாதி என்பது ஒரு கூட்டமைப்பே கிடையாது. ஒரு சாதி மற்ற சாதியுடன் இணைந்தது என்பதற்கான உணர்வே இல்லை. ஆனால் இந்து முஸ்லிம் கலவரத்தின் போதுதான் இந்த சாதிகள் ஒன்றோடொன்று இணைகின்றன என்று அடுக்கடுக்கான தரவுகளின் அடிப்படையில் சாதிய அமைப்பின் எதிர்மறை விளைவுகளை அம்பேத்கர் விளக்கிக் காட்டினார். "சதுர் வர்ணம்" புதியதன்று. வேதத்தைப் போன்று பழமை யானது. இந்திய வரலாற்றில் ஒரே ஒரு கால கட்டத்தில்தான் புகழ், உயர்வு, சுதந்திரம்மூன்றும் இருந்தது. அதுதான் மௌரியர்கள் காலமாகும். மற்ற எல்லாக் காலகட்டங்களிலும் தோல்வியும் இருளும்தான் இருந்தன. மௌரியர்களின் காலத்தில்தான் சதுர்வர்ணம் முழுமையாக அழித்தொழிக்கப்பட்டது. பெரும் பான்மையான

சூத்திரர்கள் அவர்களாகவே முன்வந்து அரசாள் பவர்களாக மாறினர்.

இந்தியச் சமூகத்தில் பெரும் பிளவை ஏற்படுத்தி, பொருளாதாரத்தின் முக்கியமான காரணியான உழைப்பைப் பெரும்பான்மையான சூத்திரர்களுக்கு வழங்கிவிட்டது. கடும் உழைப்பை நல்கிய பெரும்பான்மையான மக்கள் ஒடுக்கப் பட்டார்கள்; ஒதுக்கப் பட்டார்கள் தாழ்த்தப்பட்டார்கள். அம்பேத்கர் இதன் காரணமாகத்தான் கொதித்தெழுந்து கீழ்க்கண்ட வினாக்களை வைத்தார்:

"உலகில் எந்தவொரு சமூகத்திலாவது அணுக முடியாத, தொடமுடியாத நிழல்பட முடியாத, பார்க்கக்கூடாத மக்களைத் தன்னகத்தே உள்ளடக்கி உள்ளதா? உலகின் எந்தச் சமூகத்தி லாவது குற்றப்பரம்பரை என்று மக்கள் சமூகத்தில் உள்ளதா? எந்தச் சமூகத்திலாவது எப்படி ஆடை அணிவது என்று கூடத் தெரியாமல் காட்டில் வாழும் பழங்கால மக்களை இன்றளவிலும் காணமுடியுமா?"

நிலம், மூலதனம் அமைப்பு போன்ற மற்ற பொருளாதாரக் காரணிகளை உயர் வகுப்பினரின் பிடியில் தள்ளிவிட்டது. எனவேதான் அம்பேத்கர் குறிப்பிடுவது போன்று கிழக்கிந்தியக் குழும ஆட்சி தொடங்கிய காலத்தில் இவர்களின் செல்வாக்கு ஆங்கிலேயர்களைக் கூட இவர்களின் வசதிக்கேற்ப சட்டமியற்றச் செய்தது. இவர் களுடைய செல்வாக்குக் கிழக்கிந்தியக் கம்பெனி யின் பிரிட்டிஷ் ஆட்சியினர் கூட ஏற்றுக் கொள்கிற அளவிற்கு இருந்ததையும் அம்பேத்கர் குறிப்பிட்டுள்ளார்.

அம்பேத்கரின் மேற்கூறிய கருத்தும் கணிப்பும் இன்றளவும் அரசியலிலும் பொருளாதாரத்திலும் ஆட்சியிலும் தொடர்ந்து நிலை பெற்றிருப்பதை விடுதலை பெற்ற இந்தியாவில் பல நிகழ்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன.

தனியார் துறையில், குறிப்பாக மென்பொருள் தொழிலில் இந்திய அளவிற்கு உயர் சாதியினரின் ஆதிக்கமே இன்றும் நிலைபெற்றுள்ளது. பெரியார் அண்ணா, காமராசர் போன்ற பெருந்தலைவர்கள் இடஒதுக்கீடு கொள்கையில் சரியான விழிப்புணர்ச்சியுடன் தமிழ்நாட்டில் செயல்பட்டதாலும், விதிவிலக்காகத் தமிழ் நாட்டில் காங்கிரசுக் கட்சி இந்துமத சனாதனிகளின் ஆதிக்கத்தில் செல்லாத காரணத்தினாலும் பா.ஜ.க. தமிழ்நாட்டில் வேரூன்ற முடியாமல் திண்டாடுகிறது.

சென்னை வளர்ச்சி ஆய்வு மையம் (Madras Institute of Development Studeis), சென்னை தொழில்நுட்பக் கழகம் (Indian Institute of Technology, Chennai) ஆகிய கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் விஜய பாஸ்கர், சுரேஷ்பாபு ஆகிய ஆய் வாளர்கள் சென்னையில் தகவல் தொழில் நுட்பத் துறையில் தனியார் துறையிலும் அரசு தனியார் பங்களிப்போடு செயல்படும் துறை களிலும் வேலை வாய்ப்புகளைப் பெற்றவர்கள் பற்றிய ஒரு கள ஆய்வினை மேற்கொண்டனர்.

அந்த ஆய்வின்படி ஊர்ப்புறங்கள், சிறு நகரங்களில் படித்த தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப் பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் சென்னையின் தகவல் தொழில் நுட்பத் துறையில் இடம் பெற்று வருகின்றனர் என்ற புள்ளி விவரங்களை அளித்துள்ளனர் .இவர்களது சராசரி மாத வருமானம் அரசு மற்றும் பொதுத்துறை, தனியார் துறைகளைவிட அதிக மாகவும் உள்ளது என்றும் விளக்கி யுள்ளனர். இத்தகைய “உள்ளடக்கிய வளர்ச்சி” மற்ற மாநிலங்களில் இல்லை என்பதையும் சுட்டி யுள்ளனர். இத்தகைய சமூக நீதியைத் தமிழ்நாடு அடைந்து வந்துள்ளதற்குத் தந்தை பெரியார் நிகழ்த்திய பெரும் போராட்டங்களும் காரணங் களாக அமைகின்றன.

தந்தை பெரியார் சாதியத்தைப் பற்றிக் குறிப்பிடும் போது.. .. "செருப்பைத்தைக்கும் தொழில் ஒரு கூட்டத்திற்கே அதுவும் இந்துமத தர்மப் படி 5ஆவது சாதிக்கே ஒதுக்கப்பட்டு விட்டதால் தான், அது நம் நாட்டில் இழிதொழி லாகக் கருதப்பட்டு வருகிறதே ஒழிய அத்தொழில் இழிதொழில் என்பதற்காக அல்ல. அது போல்தான் வீதிகூட்டும் தொழிலும் கழிவறை சுத்தம் செய்யும் தொழிலுக்கும் மணியடிக்கும் தொழிலுக்குப் பெருமை இருந்து வருவதற்கும் இதுதான் காரணம்.

நாங்கள் மட்டும் ஏன் உடலுழைப்பு செய்தே வாழ வேண்டும்? அப்படியிருந்தும் நாங்களேன் இழிசாதி மக்களாக வாழ வேண்டும்? என்று தொழிலாளர்கள் கிளர்ச்சி செய்ய வேண்டும். இன்றைய தொழிலாளர்கள் கூலி உயர் விற்காகக்

கிளர்ச்சி செய்கிறார்களே ஒழிய, தமது இழிவு நீங்கக் கிளர்ச்சிச் செய்யக் காணோம்." என்கிறார்.

தன் வாழ்நாள் முழுவதும் போராடியும் இந்துமதத்தின் உயிர்நாடியாய் விளங்கும் சாதியத்தை ஒழிக்க முடியாமல் விரக்தியுற்ற அம்பேத்கர்.

"நான் இந்துவாகப் பிறந்துவிட்டேன்; ஆனால் இந்துவாகச் சாகமாட்டேன்" என்றார் . அவருக்குப் பெரியார் அனுப்பிய தந்தியில் "நீங்கள் மதம் மாறுவதாக இருந்தால் தனியாகப் போகக் கூடாது. குறைந்தது ஒரு லட்சம் பேருடன் மதம் மாற வேண்டும். அப்போதுதான் அம்மதத்தான் மதிப்பான்"என்று குறிப்பிட்டிருந்தார்.

1954 டிசம்பர் 3ல் பர்மாவின் தலைநகர் ரங்கூனில் நடந்த உலக புத்தர் மாநாட்டில் அம்பேத்கரின் அழைப்பின் பேரில் பெரியார் கலந்து கொண்டார். அப்போது அம்பேத்கர் பெரியாரைப் புத்தமதத்தைத் தழுவும்படிக் கோரினார். அதற்குப் பெரியார் "இந்து மதத்தில் இருக்கும்போதுதான் அதன் கொடுமைகளை எதிர்த்துப் பேச முடியும். நான் இன்னொரு மதத்துக்காரனாக இருந்தால் அப்படிப்பட்ட வசதி எனக்கு இருக்காது. நான் வெளியில் இருந்து கொண்டு புத்த மதத்தைப் பரப்புரை செய்கிறேன்." என்றார். 1956 அக்டோபர் 14ஆம் நாள் நாகபுரியில் புரட்சியாளர் அம்பேத்கர் மூன்று லட்சம் தொண்டர்களுடன் பௌத்த மதத்தைத் தழுவிக் கொண்டார். அம்பேத்கரின் மதமாற்ற நிகழ்வுக்குப் பிறகு தமிழ்நாட்டின் சென்னை, வேலூர், பெங்களூர், ஹூப்ளி, கோலார் தங்கவயல் ஆகிய பகுதிகளில் வாழ்ந்த மக்களும் பௌத்த மதத்திற்கு மாறினர்.

கேரளத்தின் வைக்கம் என்ற ஊரின் நடுவே அமைந்துள்ள ஆலய வீதிகளில் ஒடுக்கப்பட்ட புலையர், ஈழவ மக்கள் நடக்கக் கூடாது என ஆதிக்கச் சாதிகள் தடை விதித்திருந்தனர். அதை எதிர்த்து 1924ல் கடுமையான போராட்டத்தை முன்னெடுத்த பெரியார் சிறையில் அடைக்கப் பட்டார். இறுதியில் தொடர் போராட்டத்தால் வெற்றி கிட்டியது. பெரியாரின் வைக்கம் போராட்டத்தை ஆதரித்து அம்பேத்கர் தான் நடத்திய 'ஊமையர்களின் தலைவர் ' என்ற இதழில் 'வைக்கம் போராட்டத்தின் வெற்றி ' எனும் தலைப்பில் தலையங்கம் தீட்டினார். அதில் 'மகர்' என்ற இடத்தில் பொதுக் குளத்தில் பட்டியலின மக்கள் தண்ணீர் எடுக்க உரிமை கோரிப் போராட்டம் நடத்துவதற்கு, தந்தை பெரியார் நடத்திய வைக்கம் போராட்டம் மிகுந்த தாக்கத்தை உண்டாக்கியதாகக் குறிப்பிட் டிருந்தார்.

இவ்வாறு சம காலத்தில் சாதி ஒழிப்பு இந்துத்துவ எதிர்ப்பு, ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக அரசியல் பொருளாதார விடுதலை போன்ற தளங்களில் தந்தை பெரியார் மற்றும் அண்ணல் அம்பேத்கர் ஆகிய ஆளுமைகள் இடையறாது கிளர்ச்சிப் போராட்டங்களை நடத்தி வெற்றி கண்டு வந்தனர். பெரியாரிய அம்பேத்கரிய விழுமியங்களுடன் இந்திய உழைக்கும் வர்க்கம் மார்க்சியப் பாதையில் பயணித்தாலே மனித குல விடுதலைக்குத் தீர்வு காண இயலும்.

*(அம்பேத்கர் நினைவு நாள் - டிசம்பர் 6*

*பெரியார் நினைவு நாள் - டிசம்பர் 24)*

---

# கேரள மாநில வெள்ள நிவாரண நிதி

**த**மிழ்நாடு நெடுஞ்சாலைத் துறை பொறியாளர் சங்கத்தின் பொது நிதியிலிருந்து கேரள முதலமைச்சரின் பேரிடர் நிவாரண நிதிக்கு ரூ. 5 லட்சம் தொகையினை கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்களிடம் சங்கத்தின் தலைவர் பொறிஞர் அ.வேங்கடாசலம் திருவனந்தபுரத்தில் நேரடியாக வழங்கினார். உடன் பொதுச் செயலாளர் பொறிஞர் ஆர்.தீபக், பொருளாளர் பொறிஞர் எஸ்.கண்ணன், செயற்குழு உறுப்பினர் பொறிஞர் ஆர்.அழகர் சாமி ஆகியோர் உடனிருந்தனர். காசோலையினை



பெற்றுக் கொண்ட முதலமைச்சர் சங்க உறுப்பினர் களுக்கு நன்றியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டார். ◁

# வெல்வோம் வா தோழி

நவம்பர் 27
காலவரையற்ற வேலை நிறுத்தம்!
சரி... நாம் என்ன செய்யப் போகிறோம்?
பெண் அரசு ஊழியர்களின் துயரங்களுக்காக
கோபப்படாத விழிகள்...
அரசு ஊழியர்களின் போராட்டத்தினால்
கிடைத்த கோரிக்கைகளுக்காக
பெருமை கொள்ளா உதடுகள்...
அரசு ஊழியர் - ஆசிரியர்களின் உரிமைக்காக
இயங்காத இதயங்கள்...
இருந்தாலும் இறந்தனவே!



பிறப்பின் உருவத்தை - தாயின்
கருப்பை தீர்மானிக்கலாம் - ஆனால்...
பிறப்பின் இலட்சியத்தை உன் கருத்துதான்
தீர்மானிக்கிறது... அரசு பணியில்
சமூக பாதுகாப்பை பெற்றிட வேண்டுமா? வா
ஜாக்டோ-ஜியோவின் பக்கம்!

போராட்டத்தின் வெற்றியின் மகிழ்ச்சியை
துய்த்திட வேண்டுமெனில்,
போராட்டத்தின் வலிதனை உணர்ந்திட வேண்டும்!
இயக்கப் பாதையில் துணிந்திட வேண்டும்!

நீரலை எதிர்த்து... ஓர் இலைப்பற்றி
தன்னந்தனியாய் போராடிப் போராடி
கரை சேரும் சிற்றெறும்பின்
விடாப்பிடி வேண்டும்!... நமக்கு!

இடையில் பல்வேறு இன்னல்களைத் தாண்டி...
முதல்வரே தருவார் என்பவரின் சுயநலம் தாண்டி...
ஒன்றுபடும் தோழர்களின் கூட்டமைப்பில் தோய்ந்து
முரண்படும் தோழமையுடன் விட்டுக்கொடுத்து
முற்றிலும் கூட்டுப் போராட்டமே சரியென உணர்ந்து
பற்றிடும் உணர்ச்சியில் போராட்டப் பதாகையை
உயர்த்து!

போராட்ட கோரிக்கைக்கு நீ பொருந்து!
பார்! போராட்டத்தின் இனிமை புரியும் உனக்கு!

என் சூழல்... என் வேலை...
என் குடும்பம்... குழந்தைகள்...
என தன் நிலை பார்த்து...
வருவதல்ல போராட்டம்... அரசாங்கம்
2003-க்குப் பின் பணியிலமர்த்திய சி.பி.எஸ்.
அரசு ஊழியர் - ஆசிரியர் நிலைபார்த்து
இப்போதே மாற வேண்டும் - இல்லையேல்
மாற்றியமைப்பதே நமது போராட்டம்!

சரியான காலத்தில் போராட அழைக்கும்
தலைமையின் குரல்... நவம்பர் 27-ல்
உன்னிடம் வேண்டுவது, அதிகார
ஆணவங்களுக்கு எதிராக ஏதாவது செய் என்பதால்
காலவரையற்ற வேலை நிறுத்தத்திலே
முழுமையான பங்களிப்பிற்கு குறைவாக
வேறெதுவும் வேண்டாம் என்பதே!

அன்பு தோழியே!
இந்த வேண்டுகோளை விட்டுவிடாதே
புரிந்து கொள்!
போராட்டத்தின் பணிச்சுமை ஏற்பவர் எவரோ?
கோரிக்கை வெற்றியின் மகிழ்ச்சிக்கு
உரியவர் அவரே!
வெல்வோம் வா தோழி!

- **எஸ்.தமிழ்ச்செல்வி**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்

**Tamilnadu Government Employees' Association**

(பதிவு எண் 237/84)

தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்

எண். 46, தோழர் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeags@gmail.com

| | | |
|---|---|---|
| மாநிலத் தலைவர் | | பொதுச் செயலாளர் |
| மு.சுப்பிரமணியன் | | மு.அன்பரசு |
| மாநில துணைத் தலைவர்கள் | | மாநிலச் செயலாளர்கள் |
| ந.குமாரவேல் | | இரா.பன்னீர்செல்வம் |
| ஆ.செல்வம் | | சி.ஆர்.இராஜகுமார் |
| எஸ்.தமிழ்ச்செல்வி | | என்.ஜனார்த்தனன் |
| சு.பார்த்திபன் | | தி.கலைச்செல்வி |
| மொ.ஞானத்தம்பி | மாநிலப் பொருளாளர் | எம்.சௌந்தரராஜன் |
| மு.சுப்பிரமணியன் | எம்.தங்கராஜ் | ஏ.பெரியசாமி |

Letter No.30/2018 Date: 24.10.2018

Respected Chief Minister,

**Sub** : Flood Relief – Flood Relief Fund collected by the Tamil Nadu Government Employees Association [ TNGEA ]– Donating to Kerala Chief Minister's Distress Relief Fund [CMDRF] – Regarding

oo0oo

The State of Kerala has been affected by the unprecedented torrential rain which devastated the entire stretch of the State which is considered the worst calamity in the history of Kerala. The devastation and destruction are extremely severe and beyond a description. The loss of life, livelihood, homes, roads, bridges, agriculture, power lines and public infrastructure will have far-reaching impact on socioeconomic fronts. As the whole World sympathized with the people of Kerala, as neighbouring state and brethren of Malayalees community, We the Government Employees of Tamil Nadu were more concerned to the sufferings. We are indebted to the people of Kerala as they stood with the people of Tamil Nadu when similar devastation happened during the year 2015 and liberally contributed to the relief and rehabilitation.

We are aware of the onerous task of rehabilitation and rebuilding the lives and homes of the affected people by the State of Kerala under your shrewd stewardship. We are also aware of the mammoth requirement of funds and the apathy of the Central Government in

extending financial help. However, toiling masses across the Country is with the people of Kerala and the Government of Kerala.


As part of the working class, We, the Tamil Nadu Government Employees Association are well aware of our responsibilities and our cultural connection with the people of Kerala are dates back to several centuries. Hence, the TNGEA had given a call to the Employees to donate liberally and collected donation through *hundi.* In two days collection, an amount of Rs. 23,08,292/- (Twenty three lakh eight thousand two hundred and ninety two only) was collected.

Though this amount is a small one when compared to the requirement, as a token of love and affection and to show our solidarity with the people of Kerala, We enclose herewith a Cheque bearing No. 345618 of Punjab National Bank, Triplicane Branch, Chennai-5, Dated 23.10.2018 for an amount of 23,08,292/- towards the Kerala CMDRF.

We assure you Sir, we will continue to support the rehabilitation and rebuilding of the State of Kerala from the unprecedented calamity and hope the people of Kerala will rise from this catastrophe with their grit and determination.

With Kind regards

**(M.Subramanian)** | **(M.Anbarasu)**
State President | General Secretary


punjab national bank
Triplicane, CHENNAI - 600005
RTGS/NEFT IFS CODE : PUNB0034600
PAYABLE AT ALL BRANCHES
24 10 2018
D D M M Y Y Y Y
PAY CMDRF OR BEARER
RUPEES Twenty Three Lakhs Eight Thousand two hundred - and ninety two only
₹ 2308292
A/c. No. 0346000100103835
SAVINGS A/c
0346000100103835
For TN GOVT. EMPLOYEES ASSOCIATION
For Tamilnadu Government Employees' Association
President. Treasurer
Authorised Signatory(ies)
GWA
345618
⑈345618⑈ 600024015⑆ 31

**தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் கேரள மாநில முதலமைச்சரின் பேரிடர் நிவாரண நிதிக்கு அளிக்கப்பட்ட காசோலை**

# விடுதலைப் போரில் பெண்களின் பங்கு

எஸ்.தமிழ்ச்செல்வி

*அக்கினிக் குஞ்சொன்று கண்டேன் - அதை*
*ஆங்கொரு காட்டில் ஓர் பொந்திடை வைத்தேன்*
*வெந்து தணிந்தது காடு - தழல்*
*வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ?*
*தத்தரிகிட தத்தரிகிட தித்தித்தோம்*

*- பாரதியார்*

விடுதலைப் போர் என்பது கத்தியின்றி, ரத்தமின்றி நடந்த யுத்தமல்ல... பெண்மையாய் மயிலிறகால் வருடிக்கொடுத்து பெறப்பட்டதுமல்ல.. லட்சக்கணக்கான மக்களின் உயிர்களை விலையாய் பெற்றது. இந்த உயிர்த் தியாகத்தில் ஆண், பெண் என்ற பேதமெல்லாம் இல்லை. பல்வேறு வடிவங்களில் பல தன்மைகளில் மக்கள் திரட்டப்பட்ட மிகப்பெரும் சம்பவமாகும். அகிம்சை போராட்டம், ஆயுதம் தாங்கிய போராட்டம் என இரு வழிகளும் விடுதலைப் பாதையை நோக்கி நடைபோட்டன. தேச விடுதலையே முதன்மையாய் இருந்தது. ஆனால் வெறும் விடுதலை முழக்கம் மட்டும் அப்போது எழவில்லை. அந்தக் காலகட்டத்தில் விடுதலைப் போராட்டத்தின் இணைகோடுகளாக சமூக சீர்திருத்த போராட்டங்கள், தீண்டாமைக்கு எதிரான போராட்டம், நிலம் சார்ந்த போராட்டம், தொழிலாளர்கள் பிரச்சனைகள் சார்ந்த போராட்டங்களும் இணைந்தே நடந்தன.

இத்தகைய போராட்டங்களில் எல்லாம் ஆண்களும், பெண்களும் இணைந்தே வீரம் மிக்க போராட்ட களத்தில் நின்றனர். அன்றைய சமூகத்தில் பெண்களின் நிலை, வாழ்க்கைச் சூழல், கல்வி விகிதம், சமூக மூடநம்பிக்கை, மதகோட்பாடுகள், சாதி முறையின் அடக்குமுறை கருத்துக்கள் போன்ற ஒட்டுமொத்த சூழலையும் கணக்கிட்டுப் பார்த்தால் அவர்களின் தேசபக்த உணர்வு நம்மை ஆச்சரியப்பட வைக்கிறது.

1730ஆம் ஆண்டு ராமநாதபுரம் மன்னர் செல்லமுத்து சேதுபதி - சக்கந்தி முத்தம்மாளுக்கு ஒரே மகளாக பிறந்தார் வேலு நாச்சியார். எனினும், ஆண் பெண் பேதம் இல்லாமல் வளர்க்கப்பட்டார். வாள் வீச்சு, அம்பு விடுதல், குதிரையேற்றம், ஈட்டி எறிதல், யானையேற்றம் என்று எல்லா போர்க்கலைகளையும் கற்றார். வீர விளையாட்டுகள் மட்டுமின்றி கல்வி கற்பதிலும் வேலு நாச்சியார் திறமையானவர். பத்து மொழிகள் கற்றுக் கொண்டார். 1746ஆம் ஆண்டு சிவங்கை மன்னர் முத்துவடுகநாதரை திருமணம் செய்து கொண்டார். வெள்ளையரை எதிர்த்து விடுதலை குரல் கொடுத்த பாளையக்காரர்கள் வரிசையில் முத்துவடுகநாதர் குறிப்பிடத்தக்கவர்.

1752-ல் மதுரையை ஆண்ட விசயகுமார நாயக்கர் மீது பிரிட்டிஷ் கம்பெனி கேப்டன் கோப் போர் தொடுத்து மதுரையை கைப்பற்றியபோது மதுரைமீது போர் தொடுத்து வெற்றிபெற்று மீண்டும் விசயகுமார நாயக்கரையே மதுரை மன்னராக பதவி அமர்த்தினார். இதனால் பிரிட்டிஷ் கம்பெனியர்களுக்கு எதிரியானார். சிவகங்கை சார்பாக திரை செலுத்த மறுத்தார். இந்த சமயத்தில் வெள்ளைய படை ஒன்று ராமநாதபுரத்தை கைப்பற்றியது. ராமநாதபுரத்தின் மீது படையெடுத்து மறவர் சீனம் படைகளுடன் சேர்ந்து எதிரிகளின் பீரங்கிப் படையை தோற்கடித்து ராமநாதபுரத்தை வென்றார். இனி முத்துவடுகநாதரை போரில் வெல்ல முடியாது என்று சமாதானம் பேசினர். அதனை நம்பி பாதுகாப்புகளை குறைத்துக் கொண்டு காளையார்கோயிலுக்கு இறந்த வீரர்களுக்கு அஞ்சலி செலுத்த செல்வதால் ஆயுதம் எடுத்துச் செல்லாத நேரத்தில் பான்சோரால் துப்பாக்கியால் சுடப்பட்டார். அவரின் மூத்த மகளும் கொல்லப்பட்டார். ஆண் வாரிசு இல்லாத சிவகங்கையை தன்னுடன் இணைப்பதாக அறிவித்தது வெள்ளை அரசு. கணவன் படுகொலையை தொடர்ந்து வேலு நாச்சியார் நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்றார்.

நவாபையும், ஆங்கிலேய படையையும் வீழ்த்த ஹைதர் அலியின் உதவியை நாடுவது என்று தீர்மானித்தார். வீரமங்கையின் உருதுமொழி திறமையையும், புத்தி சாதுர்யத்தையும், விடுதலை வேட்கையையும் கண்டு ஆச்சரியப்பட்டு உறுதியளித்தார். ஏழாண்டு காலம் திண்டுக்கல் கோட்டை, விருப்பாச்சி கோட்டை, அய்யம்பாளையம் கோட்டை என மாறிமாறி வாழ்ந்து வந்தார்.

1780 ஐப்பசி திங்கள் 5ஆம் நாள் வேலு நாச்சியார் தலைமையில் ஒரு படை திண்டுக்கல்லில் இருந்து புறப்பட்டு காளையார்கோயிலை கைப்பற்றியது. சிவகங்கையில் தம்மை காட்டிக் கொடுக்காத வெள்ளையரால் வெட்டுண்ட உடையாளுக்கு வீரக்கல் ஒன்றை நடச் செய்தார் வேலு நாச்சியார். சிவகங்கையையும் கைப்பற்றினார்.

வேலு நாச்சியாரை நினைக்கும் அனைவரும் அவரின் வெற்றிக்கு அச்சாரம் போட்ட குயிலியின் வரலாற்றை மறக்கவும் முடியாது, மறைக்கவும் முடியாது. வேலு நாச்சியாரின் போர் பயிற்சிக்கான ஆசிரியர்களில் சிலம்பு வாத்தியார் வெற்றிவேல் மிக முக்கியமானவர். இவர் வேலு நாச்சியாரின் மெய்காப்பாளரும் கூட. இவ்வளவு நம்பிக்கைக்குரிய சிலம்பு வாத்தியார் எதிரிகளால் விலை பேசப்பட்டார். நம்பிக்கைக்குரியவராக இருந்த சிலம்பு வாத்தியார் ராணியின் காலை சுற்றியிருந்த நச்சுப் பாம்பு என அறிந்து குயிலி அவரை படுகொலை செய்தார். சம்பவத்தை அறிந்த வேலு நாச்சியார் தன் மீதும், நாட்டின் மீதும் கொண்ட பற்றின் காரணமாக ஒரு பெண் துணிச்சலாக மேற்கொண்ட செயலைக் கண்டு அகமகிழ்ந்து தன்னுடைய மெய்காப்பாளராக குயிலியை நியமித்துக் கொண்டார். மேல்சாதியை சேர்ந்த சிலம்பு வாத்தியாரை கீழ்சாதி பெண்ணை குயிலி குத்தி கொலை செய்ததை குயிலியின் செயலுக்கு சாதி வர்ணம் பூசும் பணியினை வேலு நாச்சியார் புறம் தள்ளிவிட்டு குயிலியை பெண்கள் படைப் பிரிவுக்கு தலைவியாக்கினார். திப்புசுல்தானின் 12 பீரங்கி வண்டிகள், நூற்றுக்கணக்கான துப்பாக்கிகளை வேலு நாச்சியாரிடம் ஒப்படைக்கப்பட்டன. பெண்கள் படைக்கு தலைமையேற்று குயிலி கம்பீரமாக வந்து கொண்டிருந்தார். மதுரை கோச்சடையில் மல்லாரி ராயனை வீழ்த்தி, திருப்புவனம், மானாமதுரை என்று வெற்றி வாகை சூடியது வேலு நாச்சியார் படை. வெற்றி முழக்கத்துடன் சிவகங்கை சீமையில் நுழைந்தன. தனது நயவஞ்சகத்தால் மறைந்திருந்து முத்துவடுகநாதரை படுகொலை செய்த ஆங்கில தளபதி பாஞ்சோர், காளையார் கோயிலில் இருந்து சிவகங்கை அரண்மனை வரையிலும் அடிக்கு ஒரு போர் வீரனை நிறுத்தியிருந்தான். அனைவரது கைகளும் துப்பாக்கி ஏந்தியிருந்தன. பீரங்கிகளும் அரண்மனையை சுற்றி நிறுத்தப்பட்டிருந்தன. ஆயிரக்கணக்ககான



**வேலு நாச்சியார்**

துப்பாக்கிகளும், வெடிபொருட்களும் அரண்மனைக் கிடங்கில் பதுக்கி வைக்கப்பட்டிருந்தன. ஆங்கிலேயர்கள் நம்மைவிட நவீன ஆயுதங்களை வைத்திருப்பதுதான் அவர்களது பரரம். அதுதான் நமக்கு பலவீனம். எனவே, ஆயுதக் கிடங்கை எப்படியேனும் அழித்துவிட்டால் நாளை வெற்றி நம் வசப்படும் என்றாள் குயிலி. சொன்னது மட்டுமல்ல, அந்த பொறுப்பையும் தானே ஏற்றுக்கொண்டார். வேலு நாச்சியார் அவளை நம்பி அந்த மகத்தான பணியை ஒப்படைத்தார். குயிலியின் தலைமையிலான பெண்கள் படையோடு வேலு நாச்சியாரும் போரில் ஈடுபட்டார். ஆங்கிலேயரின் நவீன ஆயுதங்களுக்கு முன்பு வேலு நாச்சியாரின் படை தாக்குபிடிக்க முடியவில்லை. இழப்புகள் அதிகமானது. தோல்வியின் அருகில் சுதேசப்படை. என்ன செய்வதென சிந்திக்கக் கூட முடியாத சூழலில், ஓர் உருவம் தன் உடலில் நிறைய சேலைகளை சுற்றிக்கொண்டு எரிநெய்யை தன் உடல் முழுவதும் ஊற்றிக்கொண்டு அரண்மனை ஆயுதக் கிடங்கில் தீப்பிழம்பாய் குதித்தது. ஒரு நொடிகூட தாமதம் இல்லாமல் ஆயுதக் கிடங்கு வெடித்துச் சிதறியது. வேலு நாச்சியாரின் வெற்றிக்கு இந்த ஆயுதக் கிடங்கின்

அழிப்பே அடிப்படையானது. இந்திய வரலாற்றில் முதல் மனித வெடிகுண்டாய் இருந்தது வீரப்புதல்வி குயிலிதான். அந்தத் தியாகிக்கு வீரவணக்கம் செய்தார் வேலு நாச்சியார்.

ஜான்சிராணி லட்சுமிபாய்தான் இந்தியாவில் குதிரைப் படையை அமைத்து போராடியவர் என்று வரலாறு கூறுகிறது. ஆனால், அதற்கு முன்னமேயே தமிழகத்தில் வேலு நாச்சியார் போராடினார் என்பதுதான் வரலாறு. தென்னகத்தின் ஜான்சிராணி வேலு நாச்சியார் என்று கூறுவதைவிட, வடக்கின் வேலு நாச்சியார்தான் ஜான்சிராணி என்று கூறுவதே பொருத்தம். இப்படிப்பட்ட போராட்ட பாரம்பரியம் மிக்க தமிழகத்தில் நடைபெறும் அனைத்துவிதமான போராட்டங்களிலும் பெண்களின் பங்கேற்பு என்பது ஒவ்வொரு முறையும் அதிகளவில் இருந்துள்ளது என்பது வரலாறு. அந்த வரலாற்றினை மெய்ப்பிக்கும் வகையில் நடைபெறும் போராட்டங்களில் பெண் ஊழியர்கள் அதிகளவில் பங்கேற்று வெற்றிக் கனியை பறிப்போம் என உறுதியேற்போம்.

இந்தப் பின்னணியில் கடந்த 1905-1918 ஆண்டுகளில் புரட்சிகரமான போக்குகளை பரிசீலனை செய்ய அமைக்கப்பட்டிருந்த ரவுலட் கமிட்டி - விசாரணையின்றி கைது செய்யும் நடவடிக்கை இந்திய மக்களின் எதிர்ப்புகளை மீறி சட்டமாக்கப்பட்டது. இப்போராட்டத்தில் பெண்கள் பலர் தலைமையேற்று கைது செய்யப்பட்டனர். அடக்குமுறை சட்டங்களை மீறுவது என்ற அறைகூவலை ஏற்று 1919ஆம் ஆண்டு பொது வேலை நிறுத்தம் (ஹர்த்தால்) பெரும் வெற்றி பெற்றது. டில்லியில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் பல நூற்றுக்கணக்கான பெண்கள் உயிரை இழந்தனர். நாட்டின் விடுதலை வீர வரலாற்றில் அழியாத சோக நினைவை உண்டாக்கியது. தமிழ்நாட்டில் இந்தப் பின்னணியில்தான் முதல் அரசு ஊழியர் இயக்கம் ஆரம்பித்தது. இந்த வளர்ச்சிப்போக்கில் ஆரம்பித்தது தான் சிவில் சர்விஸ் (பொது) 1857-ல் நடைபெற்ற முதல் சுதந்திரப் போரில் கிடைத்த அனுபவங்களில் 1858-ல் விக்டோரியா மகாராணியின் ஆட்சி ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1890-ல் கவர்னர் ஜெனரல் அரசு ஊழியர்கள் அரசியல் ரீதியான கூட்டங்களிலோ, போராட்டங்களிலோ ஈடுபடக் கூடாது என்று அறிவித்தார். 1904-ல் அரசு ஊழியர் நன்னடத்தை விதிகள் உருவாக்கப்பட்டன. அரசு ஊழியர்கள் அரசியலில் ஈடுபடக் கூடாது, நிதி கொடுக்கக் கூடாது என்று ஆணையிடப்பட்டது.

வாழ்க்கையின் பிரச்சனைகளும், பிரிட்டிஷ் அரசின் கட்டுப்பாடுகளும் அதிகமாக அதிலிருந்து விடுபட வேண்டும் என்ற உணர்வால் தொழிற் சங்கங்கள் உருவாகியது. பிரிட்டிஷ் ஊழியர்களின் "யூனியன் ஆப் போஸ்டல் எம்ப்ளாயீஸ் ஆப் பிரிட்டன்" உதயமாகி 1899-ல் அரசால் அங்கீகரிக்கப்பட்டது. 1914 முதல் 1918 வரை 5 ஆண்டுகள் நடைபெற்ற முதல் உலகப் போரில் உலக முதலாளிகளும், இந்திய நாட்டு முதலாளிகளும் உற்பத்தி பொருட்களை பதுக்கிவைத்து செயற்கையான பற்றாக்குறையை உருவாக்கி கொள்ளை லாபத்திற்கு விற்றனர். தற்போது பாஜக அரசு மத்தியில் அதனை தீவிரப்படுத்தி வருகிறது. இப்போக்கினை எதிர்த்து நாடு முழுவதும் தீவிரமான போராட்டங்கள் நடைபெற்றது. இதில் லட்சக்கணக்கான மக்கள் பங்கேற்றனர். பெண்கள் தலைமையேற்ற போராட்டங்கள் 1917-ல் லெனின் தலைமையில் புரட்சி நடைபெற்று உலகின் முதல் தொழிலாளி வர்க்கத் தலைமையிலான அரசு உருவானது. அதன் பின்னர்தான் இந்தியாவில் அரசு ஊழியர்கள் ஒன்றுபடவும், ஸ்தாபன ரீதியாக அணிதிரளவும் ஆரம்பித்தனர். 1920 ஜனவரி 31ஆம் தேதி சென்னையில் சங்கம் அமைப்பதற்கான முதல் கூட்டம் நடைபெற்றது. 1928-ல் விடுப்பு பயணப்படி மற்றும் ஓய்வூதியம் சம்பந்தமான சில விதிகளும் வகுக்கப்பட்டன. 1929-ல் இந்தியாவுக்கு பூரண சுதந்திரம் காங்கிரசின் லட்சியம் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 1931-ல் செலவு குறைப்பு கமிட்டி அமைக்கப்பட்டது. 1932 முதல் 1934 வரை 2 ஆண்டு காலம் சென்னை ராஜதானிகளும் கடுமையான அடக்குமுறைகளை கட்டவிழ்த்து விட்டனர். அவற்றை எதிர்த்த மக்களுடைய விடுதலைப் போராட்டங்களும், தேசம் காக்கும் போராட்டமும் பெண்களின் பங்களிப்புடன் தொடர்ந்தது.

தற்போது நாம் பெறும் சலுகைகளும், பொருளாதார கோரிக்கைகளும் விடுதலைப் போரினைப் போல அரசின் கரங்களில் இருந்து வலுக்கட்டாயமாக போராட்டத்தின் மூலம் பெறப்பட்டவையே.

"பெண்கள் பங்கேற்காத எந்தப் போராட்டமும் முழு அளவில் வெற்றி பெற்றதாக வரலாறுகள் இல்லை". தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மதுரையில் உதயமான 6.5.1984-க்கு பின் மத்திய

அரசுக்கு இணையான ஊதியம் என்ற கோரிக்கையை முன்வைத்து போராட்டம் அறிவித்தபோது, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் அறைகூவலை ஏற்று 1988ஆம் ஆண்டு ஜுன் 22 முதல் நடந்த காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் பெண் அரசு ஊழியர்கள் பிரமிப்பூட்டும் வகையில் கலந்து கொண்டு ஆயிரக்கணக்கில் தமிழ்நாடெங்கும் மறியலில் ஈடுபட்டனர். குதிரைப்படைகளை எதிர்கொண்டு அஞ்சாமல் போராட்டத்தில் பங்கு பெற்றனர். சிறை சென்றனர். இதற்கு முன்னோடியாக ஆரம்பப் பள்ளி ஆசிரியர் முதல் கல்லூரி பேராசிரியர்கள் வரை ஒன்றிணைந்து “ஜாக்டீ” என்ற அமைப்பின்கீழ் 1985-ல் நடத்திய போராட்டம் “ஜாக்டீ பேரியக்கமாக” உருவாக உதவியதில் பெண் ஆசிரியர்களுக்கும், அரசு ஊழியர் பெண்களுக்கும் பெரும் பங்கு உண்டு. நகல் எரிக்கும் போராட்டத்தில் பெண் ஆசிரியர்கள் முன்னணி பாத்திரம் வகித்தனர். சிறை நிரப்பிய 10,000க்கும் மேற்பட்ட பெண் ஆசிரியர்களில் நிறைமாத கர்ப்பிணிகளும் மன உறுதியோடு சிறைவாசத்தை அனுபவித்தனர். திருமண தேதியையும் சிறைக்குள் இலட்சியத்தோடு கழித்தனர். பல்லாயிரக்கணக்கில் பெண் ஆசிரியைகள் ஆர்ப்பாட்டம், ஊர்வலம், உண்ணாவிரதம் என பலகட்ட போராட்டங்களில் மட்டுமல்லாது, தமிழகத்தின் சிறைச்சாலைகளையும் நிரப்பினர் என்பது பெண் ஊழியர்களின் இயக்க வரலாற்றில் ஒரு மைல்கல் எனலாம். இத்தகைய போராட்டங்களுடைய வெற்றி பெண் ஊழியர்களின் மனதில் இருந்த அச்ச உணர்வை ஓரளவுக்கு அகற்றியது. அதிகாரிகளுக்கும், அரசாங்கத்திற்கும் மரியாதை தருவோம். ஆனால், அஞ்ச மாட்டோம் என்ற தன்னம்பிக்கை இப்போராட்டம் நமக்கு அனுபவத்தை கொடுத்தது.

2003ஆம் ஆண்டு நடைபெற்ற போராட்டத்தின்போது ஆட்சியில் இருந்த ஜெயலலிதா அரசு, போராடி பெற்ற சலுகைகளை பறித்தபோது, அரசு ஊழியர் சங்கத்தின் அறைகூவலை ஏற்று தொடர்ச்சியான போராட்டங்களில் பங்கேற்று 2003-ல் வரலாற்றுச் சிறப்புமிக்க வேலை நிறுத்தத்தில் அதிகளவில் பெண்கள் பங்கேற்றனர். ஊதிய பிடித்தம், ஒழுங்கு நடவடிக்கை என 1,70,000 ஊழியர்கள் டிஸ்மிஸ் நடவடிக்கை, பாலியல் வழக்கில் பெண் ஊழியர்கள் கைது செய்யப்படுவார்கள் என்ற அச்சுறுத்தலும், அரசு குடியிருப்புகளில் இருந்து அப்புறப்படுத்தப்பட்ட நிலையிலும், எஸ்மா, டெஸ்மா சூழ்நிலையிலும் பலத்த அச்சுறுத்தல்கள் இருந்தாலும், அதனை பொருட்படுத்தாமல் ஸ்தாபனத்தின் மீது நம்பிக்கை வைத்து பெண்கள் தீரமுடன் பங்கேற்று வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்கினர்.

இப்படி தமிழகத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தனியாகவும், ஜாக்டோ-ஜியோ சார்பிலும் கடந்த 1988, 2002, 2003, 2016, 2017ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற அரசு ஊழியர் சங்கத்தின் போராட்டத்தைக் காட்டிலும் 2018 நவம்பர் 27 முதல் நடைபெறும் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்திலும் பெண்கள் முன்னணி பாத்திரம் வகித்து தலைமையேற்று வெற்றிகரமாக்குவோம்! ◁

---

## பணி ஓய்வு - பாராட்டு விழா

### மன்னார்குடி

தமிழ்நாடு அரசு அனைத்து மருந்தாளுனர் சங்க முன்னாள் மாநில தலைவர் வி.கோவிந்தராஜ் பணி ஓய்வு பாராட்டு விழா 26.10.2018 அன்று மன்னார்குடியில், சங்கத்தின் மாநில தலைவர் எஸ்.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது.

### வேதாரண்யம்

04-10-2018 அன்று வேதாரண்யம் வட்ட மைய அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் அரசு ஊழியர் சங்க வேதாரண்யம் வட்டக் கிளைச் செயலாளராக கடந்த 15 ஆண்டுகளாக தொடர்ந்து பணியாற்றிய எம்.ஜி.இராமமூர்த்தி அவர்களின் அரசு பணி நிறைவு பாராட்டு விழா வட்டத் தலைவர் பழ.பக்கிரிசாமி தலைமையில் நடைபெற்றது. புதிய வட்டச் செயலாளர் வி.கணேசன் வரவேற்புரையாற்றினார். வட்டக்கிளை நிர்வாகிகள், துறைவாரி மற்றும் தோழமை சங்க நிர்வாகிகள் வாழ்த்துரை வழங்கினர். நினைவு பரிசை மாநிலச் செயலாளர் எம்.சௌந்தர்ராஜன் வழங்கினார். பணி நிறைவு பெற்ற எம்.ஜி.இராமமூர்த்தி ஏற்புரையாற்றினார். இறுதியாக வட்டப் பொருளாளர் ஜி.பழனிதுரை நன்றி கூறினார்.



# பன்னாட்டு கம்பெனிகளும் தமிழக அரசின் நிலைபாடும்



திடி.கலைச்செல்வி

**கா**ஞ்சிபுரம் மாவட்டம் திருப்பெரும்புதூர் வட்டத்தில் உள்ள இருங்காட்டுக்கோட்டையில் பல பன்னாட்டுக் கம்பெனிகள் இயங்கி வருகின்றன. இருங்காட்டுக் கோட்டை என்ற பெயருக்கேற்ப அங்குள்ள பன்னாட்டுக் கம்பெனி களில் வேலை பார்க்கும் தொழிலாளர்கள் இரும்புக் கோட்டைக்குள் அடைக்கப்பட்ட அடிமைகள் போல் நடத்தப்படுகிறார்கள். சமீபத்தில் அங்குள்ள யமஹா, எம்.எஸ்.ஐ., ராயல் என்ஃபீல்டு ஆகிய பன்னாட்டு கம்பெனிகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் கடந்த 50 நாட்களுக்கும் மேலாக தங்களுடைய ஜனநாயக உரிமைகளுக்காக வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தி வருகின்றனர். இத்தொழிற்சாலைகள் அங்குள்ள தொழிலாளர்களை மனிதனாகக்கூட மதிக்காமல் தொடர்ந்து கொடுமைபடுத்தி வருகின்றன.

இங்கு பணியாற்றம் தொழிலாளர்கள் கழிவறைக்கு செல்வதற்குக்கூட 5 நிமிடம், 10 நிமிடம் என நேர நிர்ணயம் செய்யப்படுகிறது. இவர்களை எப்போது வேண்டுமானாலும் “வெளியே போ” என்று சொன்னால் வெளியே போய்த்தான் ஆக வேண்டிய கட்டாயம். அவ்வப்போது ஏதேனும் காரணத்தை காட்டி தொழிலாளர்கள் மிரட்டப்படும் செயல்களும் நடைபெற்று வருகின்றன. நாளைக்கு வேலைக்கு வரும்போது உன் அப்பா, அம்மாவை கூட்டிக் கொண்டு வா என்று தொழிலாளர்களுக்கு உத்தரவிடும் வேலையும் நடைபெறுகிறது. பள்ளிக்கூடத்தில் படிக்கும் மாணவர்களுக்கு சொல்வதுபோல். பள்ளிக் குழந்தைகளையே அவ்வாறு நடத்தக்கூடாது என்று நாம் குரல் எழுப்பிக் கொண்டிருக்கும் இந்த காலகட்டத்தில் தொழிலாளர்களை பெற்றோரை அழைத்து வரச் சொல்வது எந்த வகையில் நியாயம் என்பது தெரியவில்லை. கொத்தடிமைக் கூலிகளைக் போல இத்தொழிலாளர்கள் நடத்தப்படுகின்றனர்.

இங்கு எந்தவிதமான தொழிலாளர் சட்ட நடைமுறைகளும் பின்பற்றப்படுவதில்லை. தங்களுக்கு நிகழ்த்தப்படும் இத்தகைய கொடுமை களுக்கு எதிராக நாம் தனியாளாக இருந்து எந்தக் கேள்வியும் எழுப்ப முடியாது என்ற சூழலில் அத்தொழிலாளர்கள் இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டு சங்கம் ஒன்றை உருவாக்கி சங்கப் பிரதிநிதிகள் மூலமாக பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சனைகளுக்கு தீர்வு காணலாம் என்ற அடிப்படையில் சங்கத்தை உருவாக்கி யிருக்கிறார்கள்.

ஆனால், யமஹா நிறுவனம் சங்க நிர்வாகிகள் இருவரை வேலையிலிருந்து நீக்கியது. யாரோ இருவரைத்தானே வேலையிலிருந்து நீக்கியிருக் கிறார்கள் என்று மற்ற தொழிலாளர்கள் அமைதி யாக இல்லாமல் அந்நிறுவனத்தில் பணியாற்றும்

அனைத்து தொழிலாளர்களும் ஒன்றிணைந்து நிர்வாகத்தின் இச்செயலைக் கண்டித்து அந்த நிறுவனத்தின் உள்ளே இருந்து கொண்டு உள்ளிருப்புப் போராட்டம் நடத்தினர். இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்ட தொழிலாளர் களுக்கு அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் கொடுத்த உணவுதான் உயிர் வாழ வைத்திருக்கிறது. யமஹா நிறுவனம் நீதிமன்றம் சென்று காவல் துறை உதவியுடன் அத்தொழிலாளர்களை தொழிற் சாலையை விட்டு வெளியேற்றியது மட்டுமல்லா மல், அப்பகுதியிலிருந்து 200 மீட்டர் வரை எந்தவிதமான போராட்டமும் நடத்த அனுமதி இல்லை என்று காவல் துறை அறிவித்தது. ஆனாலும் அசராத தொழிலாளர்கள் கடும் வெய்யிலிலும், மழையிலும் தரையில் உட்கார்ந்து கொண்டு போராட்டம் நடத்தினர். தங்களுடைய குடும்பத்தினரையும் இணைத்துக் கொண்டு போராட்டம், மனித சங்கிலி போராட்டம் என மனஉறுதியுடன் தங்களுடைய உரிமைகளுக்காக கடந்த 50 நாட்களுக்கும் மேலாக போராட்டம் நடத்தி வருகிறார்கள்.

கடந்த ஆண்டு யமஹா நிறுவனத்தின் வருமானம் 61% அதிகம் என்று அந்நிறுவனமே ஊடகங்களில் கூறியது. ஆனால், இவ்வளவு லாபம் ஈட்டிக் கொடுத்த நிரந்தரத் தொழிலாளர் களுக்கோ சம்பளம் என்பது 10,000 ரூபாய்க்கும் கீழ்தான் கிடைக்கிறது. மொத்தமுள்ள 4000 ஊழியர்களில் நிரந்தர ஊழியர்கள் என்பது வெறும் 807 பேர் மட்டுமே. மற்றவர்கள் எல்லாம் ஒப்பந்தத் தொழிலாளர்கள். கோடிக்கணக்கில் லாபம் ஈட்டும் இந்தத் தொழிற்சாலைக்கு இலவசமாக மின்சாரம், இடம், தண்ணீர் போன்றவற்றை தமிழக அரசு வழங்குகிறது. இருந்தும் தொழி லாளர்களுக்கு மிக சொற்ப ஊதியமே வழங்கப் படுகிறது.

தொடர்ந்து போராட்டம் நடைபெற்று வருவதால் இருதரப்பையும் அழைத்து பேச்சு வார்த்தைக்கு தொழிலாளர் நல ஆணையம் அழைத்தது. இருமுறை நடத்திய பேச்சுவார்த்தை யின்போதும் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும் என உத்தரவு பிறப்பித்த பிறகும், இதுவரை அந்த உத்தரவு அமுல்படுத்தப்படவில்லை. அந்தத் தொழிற்சாலையின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பன்னாட்டு கம்பெனி களுக்காக அரசு தொழிலாளர் நலச்சட்டங்களை காலில் போட்டு மிதிக்கும் நிலைக்கு தள்ளப் பட்டுள்ளது. இந்த சட்டங்களை நீர்த்துப் போகச் செய்யும் அளவுக்கு மத்திய அரசும் புதிய புதிய சட்டங்களை உருவாக்கி தொழிலாளர்களின் வாழ்க்கையை சூன்யமாக்கியுள்ளது.

மத்திய, மாநில அரசுகள் பன்னாட்டு கார்ப்பரேட் கம்பெனிகளின் கைப்பாவையாக இருக்கின்றன என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டிய தேவை உள்ளது. அதிகப்படியாக இளைஞர்கள் பங்கேற்றுள்ள இந்தப் போராட் டத்தை நாம் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்க முடியாது. அவர்களும் நம் பிள்ளைகளே என்பதை நினைவுகூர்ந்து அவர்களின் ரத்தத்தை உறிஞ்சி வெறும் சக்கையாக்கப் பார்க்கும் பன்னாட்டு நிறுவனங்களின் அராஜகத்தை முறியடிக்கும் வகையில் நாமும் அவர்களுக்காக போராட வேண்டும். அந்த வகையில் காஞ்சிபுரம் மாவட்ட அரசு ஊழியர் சங்கம் சார்பில் ஆதரவு ஆர்ப்பாட்டம் மாவட்டம் முழுவதும் அனைத்து வட்டக் கிளைகளிலும் நடைபெற்றது. இதில் அரசு ஊழியர் சங்க மாநிலச் செயலாளர் தி.கலைச்செல்வி திருபெரும்புதூரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றார். இந்த ஆர்ப்பாட்டம் அவர்களுக்கு மிகப்பெரிய நம்பிக்கையை ஊட்டியுள்ளது.

எனவே, தோழர்களே! மக்களை நோக்கிய பயணத்தின் ஒரு பகுதியாக இந்த இளம் தோழர்களுக்கு ஆதரவாக அரசை நிர்ப்பந்திக்கும் வகையில் மாநிலம் முழுவதும் திரண்டு பன்னாட்டுக் கம்பெனிகளின் முகத்திரையை கிழிக்க முற்படுவோம். ◁

## நினைவேந்தல் கூட்டம்

கல்வித் துறை நிர்வாக அலுவலர்கள் சங்க கரூர் மாவட்டத்தில் சங்கத்தின் மாவட்டத் தலைவராகவும், செயலாளராகவும், அரசு ஊழியர் சங்க மாவட்ட துணைத் தலைவராகவும், தமுஎகச மாவட்டச் செயலாளராகவும் திறம்பட பணியாற்றி அரசுப் பணியில் ஓய்வு பெற்ற கவிஞர். பழ.நாகராஜன் கடந்த 7.9.2018 அன்று மறைந்தார். அவருக்கு அஞ்சலி நிகழ்ந்த 2.10.2018 அன்று கரூரில் உள்ள அரசு ஊழியர் சங்கக் கட்டிடத்தில் நடைபெற்றது. இதில் நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். பல்வேறு துறைவாரி சங்கம் மற்றும் தோழமை சங்கங்கள் பங்கேற்று அஞ்சலி உரையாற்றினர்.

# 04.10.2018 அன்று ஜாக்டோ - ஜியோ சார்பில் ஒரு நாள் தற்செயல் விடுப்பு போராட்டம்

சிறப்பு காலமுறை ஊதியம் பெறும் சத்துணவு, அங்கன்வாடி, வருவாய் கிராம உதவியாளர்கள், ஊராட்சி செயலாளர்கள், ஊர்ப்புற நூலகர்கள் மற்றும் பகுதி நேர சிறப்பு ஆசிரியர்கள் ஆகியோருக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்க வேண்டும். 21 மாத ஊதிய மாற்ற நிலுவைத் தொகை வழங்க வேண்டும். இளைஞர்களின் வேலை வாய்ப்பை பறிக்கும் அரசாணை எண் 56-ஐ ரத்து செய்ய வேண்டும். கடந்த மே 8 அன்று கோட்டை முற்றுகை போராட்டத்தின் போது போடப்பட்ட பொய் வழக்கை ரத்து செய்யவேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழகம் முழுவதும் கடந்த 4.10.2018 அன்று ஜாக்டோ-ஜியோ சார்பில் ஒரு நாள் தற்செயல் விடுப்பு எடுத்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## தருமபுரி

தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் எம்.சுருளிநாதன் தமிழக ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்டச் செயலாளர் பொன்.ரத்தினம், தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க மாவட்டத் தலைவர் பி.எம்.கௌரன் ஆகியோர் தலைமை வகித்தனர்.

அரசு ஊழியர் சங்க மாவட்டசெயலாளர் ஏ.சேகர், பொருளாளர் கே.புகழேந்தி, மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் பி.எஸ். இளவேணில், வருவாய்த் துறை அலுவலர் சங்க மாவட்ட துணைத் தலைவர் சரவணன், வேளாண்மைத் துறை அமைச்சுப் பணியாளர் சங்க மாநில துணைத் தலைவர் எம்.யோகராசு, சத்துணவு ஊழியர் சங்க மாவட்ட தலைவர் சி.எம்.நெடுஞ்செழியன், நூலகத் துறை ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் முனிராஜ், கூட்டுறவுத் துறை ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் ஜி.பழனியம்மாள், தமிழ்நாடு உயர்நிலை மேல்நிலை பட்டதாரி ஆசிரியர் கழக மாவட்டச் செயலாளர் ச.கவிதா, தமிழ்நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்டச் செயலாளர் எஸ்.கேசவன், தமிழ்நாடு முதுநிலை பட்டதாரி ஆசிரியர் கழக மாவட்டத் தலைவர் யஷ்வந்ரா ஆகியோர் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினர்.

## மன்னார்குடி

மன்னார்குடியில் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வி.சோமசுந்தரம் கோரிக்கை விளக்கவுரையாற்றினார்.

## திருப்பூர்

உடுமலைப்பேட்டை வட்டாட்சியர் அலுவலகம் முன்பு ஆ.தங்கவேல் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ரா.பால்ராஜ், மா.பாலசுப்பிரமணியன், முத்துகுமாரசாமி, ஆ.அம்சராஜ் ஆகியோர் விளக்கவுரையாற்றினர். துறைவாரி மற்றும் தோழமை சங்க நிர்வாகிகள் பங்கேற்று கண்டன உரையாற்றினர். இதில் 212 பெண் ஊழியர்கள் உட்பட 375 பேர் பங்கேற்றனர்.

## தஞ்சை

ஜாக்டோ - ஜியோ சார்பில் நடைபெற்ற ஒரு நாள் தற்செயல் விடுப்பு போராட்டம் தஞ்சை மாவட்டத்தில் எழுச்சியாக நடைபெற்றது. அன்றைய தினம் மாவட்டத்தில் உள்ள ஒன்பது வட்டங்களிலும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தஞ்சை நகரத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு ஜாக்டோவின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் P.இளையராஜா தலைமை வகித்தார். ஜியோ மாவட்ட ஒருங்கிணைப்பாளர் A.ரெங்கசாமி விளக்கவுரையாற்றினார். தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழக மண்டலச் செயலாளர் R.கோவிந்தராஜன் துவக்கவுரையாற்றினார். பல்வேறு சங்கங்களின் பொறுப்பாளர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில செயலாளர் R.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார். ஜாக்டோ மாவட்ட ஒருங்கிணைப்பாளர் N. கிட்டு நன்றி கூறினார். இந்த ஆர்ப்பாட்டத்தில் 550 அரசு ஊழியர் / ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். தற்செயல் விடுப்பில் 2488 அரசு ஊழியர்களும், 3505 ஆசிரியர்களும் மொத்தம் 5993 பேர் கலந்து கொண்டனர். ◁

# தென் சென்னையிலிருந்து டெல்லி பேரணியில் மகளிர் பங்கேற்பு

நாடாளுமன்றத்தில் 33 சதவீத இட ஒதுக்கீடு கேட்டு மிகப்பெரிய போராட்டங்களை மகளிர் அமைப்புகள் உள்ளிட்ட முற்போக்கு சக்திகள் முன்னெடுத்து வரும் நிலையில் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம், அகில இந்திய விவசாயிகள் சங்கம் மற்றும் இந்திய தொழிற்சங்க மையம் நடத்திய பாராளுமன்றத்தை நோக்கிய பேரணியில் தென் சென்னையிலிருந்து சுதா, வாசுகி,ரேணுகாதேவி, புயலி, வெண்மதி, சுமதி என 35 சதவீதத்திற்கும் (மொத்தம் 14) மேற்பட்ட மகளிர் பங்கேற்றது பெருமைக்குரிய விசயம் மட்டுமல்லாது, மகளிர் பங்கேற்பு புறந்தள்ள முடியாததும், மகளிரே அனைத்திலும் முன்நிற்பர் என்பதற்கு முன்னுதாரணமாய் நிகழ்ந்தது என்பதே எம் பதிவாகும்.

2.9.2018 அன்று அதிகாலை 5.15 மணிக்கு துவங்கிய எம் பயணம் மருத்துவத் துறை, பொதுப்பணித்துறை, சுகாதார செவிலியர், சத்துணவு, பணிமனை, புள்ளியியல், மறுவாழ்வுத் துறை, வணிக வரித்துறை என தமிழக அரசின் கேந்திரமான பல்வேறு துறைகளிலிருந்து தோழர், தோழியர் பங்கேற்றதும் அவர்களோடு நமது கருத்துக்களை பகிர்ந்து கொண்டதும், படுக்கை வசதி உறுதி செய்யப்படாத நிலையிலும் இருக்கை வசதியோடு பயணத்தை தொடர தோழர்கள் மனஉறுதி கொண்டதும் வியக்கத்தக்க அனுபவமாக அமைந்தது. நாங்கள் பயணம் செய்த புகைவண்டியில் 162 பேர் பயணம் செய்தபோது, 50-க்கும் மேற்பட்டவர்களுக்கு படுக்கை வசதி உறுதி செய்யப்படாத நிலையில் தென் சென்னை மாவட்ட நிர்வாகிகள் ஈரோடு மாவட்ட மகளிர் 5 பேரை சிறப்புப் பெட்டிக்கு அனுப்பி இதர பெண் தோழியரின் படுக்கை வசதியை உறுதி செய்தது அரசு ஊழியர் சங்கம். மகளிரை பாதுகாப்பதில், அவர்களின் உரிமைகள் பெற்று வழங்குவதில் முன்கையெடுத்து செயல்படும் என்பதற்கு உதாரணமாகத் திகழ்ந்தது. நாங்கள் பயணம் செய்த ரயிலில் சேலம், திருச்சி, நாகப்பட்டினம், தேனி, ஈரோடு, கரூர், சிவகங்கை என பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த பல்வேறு துறை சார்ந்த தோழர்கள் எம்மோடு பயணம் செய்தது உற்சாகத்தை தந்தது.

பேரணி துவங்குவதற்கு முதல் நாள் (4.9.2018) அனைத்து தோழர்களுக்கும் ஜெய்ப்பூர் மற்றும் ஆக்ரா செல்ல வாகன வசதியும், உணவு வசதியும் செய்யப்பட்டிருந்தது. 5.9.2018 பேரணியில் கலந்து கொள்ள 8 மணிக்கு தங்குமிடத்திலிருந்து புறப்பட்டு பேரணி நடக்கும் ராம் லீலா மைதானத்தை அடைய பேருந்துகளில் சென்றோம். லட்சக்கணக்கான ஊழியர்கள் பங்கேற்ற பேரணி என்பதால் பேரணி துவங்குமிடத்திற்கு பல கிலோ மீட்டருக்கு முன்னனாகவே வாகன நெரில் காரணமாக இறங்கி விடப்பட்ட நாங்கள் இறங்கிய இடத்திலிருந்து கோஷத்தை எழுப்பி பேரணியை துவக்கினோம். டெல்லியின் வீதிகளில் எந்த அனுமதியுமின்றி எம் தோழர்கள் பேரணியைத் துவக்கியபோது அதை கேட்க எந்த காவல் துறையும் வரவில்லை. இதுவே அளவு மாற்றம் குணமாற்றத்தை உருவாக்கும் என்ற கருத்தினை பிரதிபலிப்பதாக இருந்தது. கோடிக்கால் பூதமடா தொழிலாளர் வர்க்கமடா என்ற கோஷம் வெற்றுக் கோஷமல்ல என்பதை நிரூபிப்பதாய் இந்தப் பேரணி அமைந்தது. காணும் இடமெல்லாம் செங்கொடியாய் இருந்தது. ஜனத்திரள் மத்தியில் ஊர்வலம் ஊர்ந்தே சென்றது. இதெல்லாம் எமக்கு புதிய அனுபவமாகப் பட்டது. ஒல்லியான தேகம், உயரம் கம்மியான உடல் வாகுடன்கூடிய ஒரு வடஇந்திய விவசாயத் தொழிலாளி தனது நாடிக்கமலத்திலிருந்து எழுப்பிய கோஷம் ராம்லீலா மைதானத்தில் மட்டுமல்ல, டெல்லி செங்கோட்டையையும் தட்டித் திரும்பியது என்றால் அது மிகையாகாது. மகாராஷ்டிரா மாநிலத்தில் இரவோடு இரவாக விவசாயிகள் நடத்திய பேரணியை நேரில் காணும் வாய்ப்பினை இந்தப் பேரரணி எமக்கு தந்தது எனலாம். புதிய பென்சன் ரத்து, தொழிலாளர் நலச் சட்டங்களை நீர்த்துப் போகச் செய்யும் கார்ப்பரேட் கயமை, விலைவாசி உயர்வை கட்டுப்படுத்துதல் ஆகிய கோரிக்கைகள் விரைவில் சாத்தியமாகும் என்ற நம்பிக்கையை இந்தப் பேரணி எமக்குத் தந்தது.

பகலவனின் பூமிப்பந்தில் மண்ணைக் கிளறி மகிமை படைக்கும் விவசாயிகளுடன் அவர்களின் வீரப்பெருமைகளில் பட்டினியோடு உடன் உழைக்கும் விவசாயக் கூலித் தொழிலாளியுடன் பஞ்சாலைகளிலும், பல்வேறு கம்பெனிகளிலும் உடலுழைப்பைச் செலுத்தும் உழைப்பாளியுடன் எழுத்தாணியை மட்டும் இயக்கிக் கொண்டிருக்கும் நாடும் இணைந்தோம் என்ற பெருமை எம்மை உவகை கொள்ளச் செய்தது எனலாம். உறுதியாய் இந்தப் பேரணி சோறும் சுகமும் போராளிகளை சோர்வடையச் செய்யும். சோற்றையும், சுகத்தையும் புறந்தள்ளி லட்சியத்தை நோக்கி பயணிக்கும்போது லட்சம் கைகள் நம்மோடு இணையும் என்பதே அதுவாகும்.

**- பிரேம்ஜி**

## அறிவிக்கை

மத்திய அரசின் உள்துறை விவகாரங்கள் அமைச்சகத்தின் 08.06.1957-ஆம் நாளிட்ட பொது-1, 20-25-26-ஆம் எண் அறிவிக்கையின்படி 1881-ஆம் ஆண்டு செலாவணி முறிச்சட்டத்தின் (மத்தியச் சட்டம் XXVI/1881) 25-ஆம் பிரிவில் ''விளக்கம்'' என்பதன்கீழ், பொது விடுமுறை நாட்களாக குறிப்பிடப்பட்ட விளக்கம் ''ஞாயிற்றுக் கிழமைகளுடன்'' பின்வரும் நாட்களும், 2019-ஆம் ஆண்டிற்கான பொது விடுமுறை நாட்களாக கொள்ளப்படும் என தமிழ்நாடு அரசு இதனால் அறிவிக்கிறது.

**இணைப்பு**

| வ.எண் | பொது விடுமுறை | தேதி | கிழமை |
|---|---|---|---|
| 1 | ஆங்கிலப் புத்தாண்டு | 01.01.2019 | செவ்வாய்க்கிழமை |
| 2. | பொங்கல் | 15.01.2019 | செவ்வாய்க்கிழமை |
| 3. | திருவள்ளுவர் தினம் | 16.01.2019 | புதன்கிழமை |
| 4. | உழவர் திருநாள் | 17.01.2019 | வியாழக்கிழமை |
| 5. | குடியரசு தினம் | 26.01.2019 | சனிக்கிழமை |
| 6. | ⋆வங்கிகள் ஆண்டு கணக்கு முடிவு (வணிக/ கூட்டுறவு வங்கிகள் | 01.04.2019 | திங்கட்கிழமை |
| 7. | தெலுங்கு வருடப் பிறப்பு | 06.04.2019 | சனிக்கிழமை |
| 8. | தமிழ்ப் புத்தாண்டு மற்றும் டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் பிறந்த தினம் | 14.04.2019 | ஞாயிற்றுக்கிழமை |
| 9. | மகாவீர் ஜெயந்தி | 17.04.2019 | புதன்கிழமை |
| 10. | புனித வெள்ளி | 19.04.2019 | வெள்ளிக்கிழமை |
| 11. | மே தினம் | 01.05.2019 | புதன்கிழமை |
| 12. | ரம்ஜான் | 05.06.2019 | புதன்கிழமை |
| 13. | பக்ரீத் | 12.08.2019 | திங்கட்கிழமை |
| 14. | சுதந்திர தினம் | 15.08.2019 | வியாழக்கிழமை |
| 15. | கிருஷ்ண ஜெயந்தி | 23.08.2019 | வெள்ளிக்கிழமை |
| 16. | விநாயகர் ஜெயந்தி | 02.09.2019 | திங்கட்கிழமை |
| 17. | மொகரம் | 10.09.2019 | செவ்வாய்க்கிழமை |
| 18. | காந்தி ஜெயந்தி | 02.10.2019 | புதன்கிழமை |
| 19. | ஆயுத பூஜை | 07.10.2019 | திங்கட்கிழமை |
| 20. | விஜயதசமி | 08.10.2019 | செவ்வாய்க்கிழமை |
| 21. | தீபாவளி | 27.10.2019 | ஞாயிற்றுக்கிழமை |
| 22. | மிலாதுன் நபி | 10.11.2019 | ஞாயிற்றுக்கிழமை |
| 23. | கிருஸ்துமஸ் | 25.12.2019 | புதன்கிழமை |

⋆ தமிழ்நாட்டிலுள்ள வணிக வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகளுக்கு மட்டுமே பொருந்தும்.

ஒப்பம்/-

பிரிவு அலுவலர்

# துறைவாரி சங்க நிகழ்வுகள்

தமிழ்நாடு சுகாதார பார்வையாளர் சங்கத்தின் மாநில செயற்குழு கூட்டம் 21.10.2018 ஞாயிற்றுக்கிழமை அன்று மதுரையில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கட்டிடத்தில் மாநில தலைவர் கே. சாந்தகுமாரி தலைமையில் நடைபெற்றது. மதுரை மாவட்ட செயலாளர் பானு வரவேற்புரையாற்றினார். ஹேமா அஞ்சலி தீர்மானம் வாசித்தார். கடந்த கால நடவடிக்கைகள் மீதும், எதிர்கால ஸ்தாபன பணிகள் குறித்தும் 1.10.2018 அன்று முதன்மைச் செயலாளர் மற்றும் இயக்குநர் ஆகியோரிடம் நடைபெற்ற பேச்சுவார்த்தை குறித்தும், மாநிலத் தலைவர் வைத்த அறிக்கை மீது செயற்குழுவில் பங்கேற்ற 20க்கும் மேற்பட்ட மாவட்டங்கள் விவாதத்தில் கலந்துக்கொண்டனர்.





பணி ஓய்வு பெற்ற மாநில பொதுச்செயலாளர், மாநிலப் பொருளாளர் ஆகியோருக்கு பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

வரும் மூன்றாண்டுகளுக்கு காலியாக உள்ள நிர்வாகிகள் பணியிடம் நிரப்பப்பட்டு கீழ்கண்ட நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மாநிலத் தலைவராக கே. சாந்தகுமாரி, மாநில பொதுச் செயலாளராக எஸ். தமிழ்ச்செல்வி, மாநில பொருளாளராக ஹேமா, மாநில அமைப்பு செயலாளராக மங்கையர்கரசி, மாநில துணைத் தலைவர்களாக கே.எஸ். சாரதாம்பாள், ராஜராஜேஸ்வரி, சிவஞானம், செலின்சாந்தி, மாநில இணைச் செயலாளர்களாக கஸ்தூரி, மனோன்மணி, புஷ்பராணி, பெரியநாயகம், மாநில தணிக்கையாளர்களாக லோகேஸ்வரி, சத்தியவாணிமுத்து ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பி.மனோன்மணி நன்றி கூறி கூட்டத்தை நிறைவு செய்தார்.

## தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கம்

### ஈரோடு

*சங்கத்தின் சார்பில் காலமுறை ஊதியம் வழங்க கோரி 25.10.2018 முதல் காத்திருப்பு போராட்டம் நடைபெற்றது. ஈரோடு மாவட்டத்தில் மாவட்டத் தலைவர் தனுஷ்கோடி தலைமையில் நடைபெற்றது. அரசு ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் வெங்கிடு போராட்டத்தை துவக்கி வைத்து பேசினார். சத்துணவு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் மூர்த்தி கோரிக்கை விளக்கி பேசினார். துறைவாரி சங்க நிர்வாகிகள் வாழ்த்தி பேசினர்.*

### நாகை

*நாகை வட்டாட்சியர் அலுவலகத்தில் மதிய உணவு இடைவேளையில் அரசு ஊழியர் சங்க நாகை வட்ட மையம் சார்பில் வட்டத் தலைவர் சி.பாலசுப்பிரமணியன் தலைமையில் ஆதரவு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் ஏ.ட்டி.அன்பழகன், மாவட்டப் பொருளாளர் பா.ராணி, மாவட்ட இணைச் செயலாளர் து.இளவரசன், ஒய்வூதியர் சங்க*



*வட்டச் செயலாளர் என்.பாபுராஜ், சத்துணவு ஊழியர் சங்க செயலாளர் சி.கலியபெருமாள், நாகை தொழிற்சங்க கூட்டமைப்பு தலைவர் சு.சிவகுமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். வட்டப் பொருளாளர் எம்.மேகநாதன் நன்றி கூறினார்*

### திருவாரூர்

*தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்க மாநில மைய முடிவின்படி, மாவட்ட தலைவர் தோழர்.வி.சி.குமார் தலைமையில் 29/10/18 அன்று காலை 10.00 மணிக்கு திருவாரூர் வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக சாலை மறியல் போராட்டம் நடைபெற்றது. கோரிக்கைகளை வலியுறுத்தி மாவட்ட செயலாளர் ஆர்.ராஜசேகரன் பேசினார். மறியலினை வாழ்த்தி த.நா.அரசு ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் வெ.சோமசுந்தரம் பேசினார்.*

## கிருஷ்ணகிரி

மாவட்டத்தில் ஒசூர், தேன்கனிகோட்டை கிருஷ்ணகிரி ஆகிய 3 வட்டங்களில் 2-11-18 அன்று சத்துணவு ஊழியர்கள் போராட்டத்திற்கு ஆதரவு ஆர்பாட்டங்கள் நடைபெற்றது. சிவாஜி, வெங்கேடேசன், வாசு ஆகியோர் தலைமையேற்றனர்

மாவட்ட நிர்வாகிகள் தோழர்கள் சந்திரன், ஜெயராமன், நடராஜன், ஜெயலட்சுமி ஆகியோர் சிறப்புரையாற்றினர். துறைச் சங்க நிர்வாகிகள்



திம்மராஜ், முகமது காசிம், சந்திரேசேகரன், குமாரி கஸ்தூரி, ஆனந்தகுமார், ஆஞ்சலேமேரி, நந்தகுமார், தேவன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். ஆர்பாட்டத்தில் 200க்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்று சிறப்பித்தனர்.

## எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அனைத்து ஊழியர்கள் சங்கம்

28-10-18 அன்று திருச்சியில் எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அனைத்து ஊழியர்கள் சங்க மாநில செயற்குழு கூட்டம் திருச்சியில் நடைபெற்றது .

இக் கூட்டத்திற்கு மாநில தலைவர் தோழர் கருப்புசாமி தலைமை வகித்தார். மாநில செயலாளர் சேரலாதன் சங்க செயல்பாடுகள் குறித்து பேசினார். தமிழ்நாடு அரசு ஊழியர்கள் சங்க மாநில துணை தலைவர் சுப்பிரமணி, மாநில மாநாட்டின் அவசியம் குறித்து விளக்கி பேசினார்.

இக்கூட்டத்தில் 15 மாவட்டங்களை சேர்ந்த செயற்குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

த.நா.அ.அனைத்து மருந்தாளுனர் சங்க முன்னாள் மாநில தலைவர் கோவிந்தராஜ் அவர்களது பணி ஓய்வு பாராட்டு விழா 26.10.18 அன்று மன்னார்குடியில் சங்க மாநில தலைவர் எஸ்.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது. விழா மேடையில் சிறப்பு விருந்தினர்கள் கலந்து கொண்டனர்.



**சேலத்தில் நடைபெற்ற கூட்டம்**

## உணவு பாதுகாப்பு அலுவலர் சங்கம்

06.10.18 அன்று நாகை மாவட்ட ஆட்சியரகத்திற்கு வருகை புரிந்த நாகை மாவட்ட முன்னாள் நல் ஆட்சியர், சுகாதாரத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ.இராதாகிருஷ்ணன் இ.ஆ.ப. ஆகியோரை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன், மாவட்டப் பொருளாளர் பா.ராணி, நாகை வட்டத் தலைவர் சி.பாலசுப்பிரமணியன் மற்றும் உணவு பாதுகாப்பு அலுவலர் எம்.ஆண்டனி பிரபு ஆகியோர் சந்தித்தனர். தமிழ்நாடு அரசு திருந்திய ஊதிய மாற்ற விதிகளின்படி 01.01.2016- முதல் ஊதிய மாற்றம் செய்யப்படும் என உரிய மாற்றத்தை இந்த அரசாணையில் வழங்கிட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டது. மனுவை பெற்றுக்கொண்டு உடன் தேவையான மாற்றம் செய்வதாக சுகாதாரத் துறை செயலாளர் உறுதியளித்தார். ◁

Printed and Published by M. ANBARASU on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: M. SUBRAMANIAN . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com